21.09.2015

# தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### ஆகப்போகுது கோவை தாவரவியல் பூங்கா! புதிய முயற்சியில் வேளாண் பல்கலை தீவிரம்




கோவை: கோவை, தமிழ்நாடு வேளாண் பல்கலையில் அமைந்துள்ள தாவரவியல் பூங்காவை மேம்படுத்தி, மாவட்டத்தின் முக்கிய சுற்றுலா மையமாக மாற்றும் முயற்சியில், பல்கலை நிர்வாகத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

வேளாண் பல்கலையில் அமைந்துள்ள தாவரவியல் பூங்கா, 1908ல், கல்லூரி மாணவர்களின் ஆய்வுக்காக, சாதாரண பூங்காவாக துவங்கப்பட்டது. காலப்போக்கில் விரிவுபடுத்தப்பட்டு, 1965 முதல் தாவரவியல் பூங்காவாக செயல்பட்டு வருகிறது. மொத்தம், 47.5 ஏக்கரில்

பரந்து விரிந்துள்ள இப்பூங்காவில், உள்நாடு மற்றும் வெளிநாட்டை தாயகமாக கொண்டுள்ள மரங்கள்,

தாவரங்கள், மலர்கள், அழகு செடிகள் என, 800க்கும் மேற்பட்ட ரகங்கள், 100க்கும் மேற்பட்ட வகைகளில் இடம் பெற்றுள்ளன.

பூங்காவில், மலரியல், நில எழிலூட்டும் துறை, மருந்து, நறுமண பயிர்கள் துறை, விவசாயிகள் அலுவலகம், வாசனை மெழுகு தயாரிப்பு கூடம் உள்ளிட்டவையும் இயங்கி வருகின்றன. தமிழக அரசு மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்திடம் இருந்து நிதி பெற்று, பூங்கா பராமரிப்பிற்கென பல்கலை வழங்குகிறது. சுற்றுலா பயணிகளை ஈர்ப்பதற்காக, பூங்கா நுழைவாயில்களிலுள்ள, அழகுச்செடிகள், ஐந்து ஆண்டுக்கு ஒரு முறை மாற்றப்படுகின்றன.

**உதிரி பூக்கள் ஆராய்ச்சி**

பூங்காவினுள், 7.5 ஏக்கர் நிலம், ஆராய்ச்சி மற்றும் உதிரி பூக்கள் சாகுபடிக்காக பயன்படுத்தப்படுகிறது. இதில், ஒவ்வொரு பருவ காலத்துக்கும் ஏற்றபடி பூ ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மூலிகை செடி நாற்று தயாரிப்பு**

இரண்டரை ஏக்கரில், மருந்து மற்றும் நறுமண பயிர்கள் துறை சார்பில், மூலிகை செடிகளின் தொகுப்பு, பெயர் பதிவுடன் வைக்கப்பட்டுள்ளது. செடிகளின் நாற்றும் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. இவை விற்பனைக்காக, வேளாண் பல்கலை, செடிகள் விற்பனை நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

**அதிசய பனை மரம்**

'ஹைப்பேன் தெபிக்கா' எனும் அடிபாக கிளைகளுடன் வளரும் இயல்புடைய அபூர்வ பனை மரம், கோவையில் இங்கு மட்டுமே உள்ளது. ஆராய்ச்சிக்காக, திபெத்திலிருந்து, 30 ஆண்டுக்கு முன் கொண்டு வரப்பட்டது, இந்த மரம். அடிபாகத்திலிருந்து கிளையாக வளர்ந்து காணப்படுவதால், சுற்றுலா பயணிகளை ஈர்ப்பதில் இது முக்கிய பங்கு வகிக்கிறது.

**சிறப்பு**

பூங்காவில், ஒரே ஒரு அசோக மரம் உள்ளது. ஒவ்வொருவரின் ராசிக்கு ஏற்ற தாவரங்கள் மற்றும் ஒவ்வொரு பூவும் அது கூற வரும் பொருளும் ஆகியவை அச்சிடப் பட்ட போர்டுகள் வைக்கப்பட்டுள்ளன. இதை, பூங்காவுக்கு வரும் சுற்றுலா பயணிகள் அனைவரும் விரும்பி பார்க்கின்றனர்.

**வயது, 107**

கடந்த, 1908ம் ஆண்டிலிருந்து பூங்கா இயங்கி வருகிறது. ஆனால், தாவரவியல் பூங்கா என பெயர் சூட்டப்பட்டு, 50 ஆண்டுகளே ஆகின்றன. மலரியல், நிலஎழிலூட்டும் துறை தலைவரும், பூங்கா மேலாளருமான கண்ணன் கூறுகையில், "ஆண்டுதோறும் இங்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. வெளிநாட்டினர் கூட வருகின்றனர். பூங்காவை இன்னும், நவீன முறையில், மேம்படுத்தி, பராமரிப்பு செய்வதற்கான ஏற்பாடுகள் நடக்கின்றன.

"பூங்காவை, மாவட்டத்தின் முக்கிய சுற்றுலா மையமாக, குழந்தைகள் முதல் பெரியவர் வரை, அனைவருக்கும் இனிமையான பொழுதுபோக்கு அனுபவத்தை வழங்குமிடமாகவும் மாற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம்," என்றார்.

## இறால் வரத்து அதிகரிப்பு விலையின்றி மீனவர் கவலை

ராமநாதபுரம்:இறால் வரத்து அதிகரித்துள்ளபோதிலும் உரிய விலை இல்லாததால் மீனவர்கள் கவலை அடைந்துள்ளனர்.தமிழக கடல் பகுதிகளில் மீன்பிடி தடைக்காலம் நீங்கிய பிறகு மே 29ல் தொழிலுக்குச் சென்ற மீனவர்களுக்கு ஒரு மாதம் போதிய மீன்வரத்து இருந்தது. ஜூன் மாதம் முதல் மீன் வரத்து குறையத்துவங்கியது. கிலோ ரூ.650க்கு விலை நிர்ணயிக்கப்பட்ட இறால் கடந்த ஒரு மாதமாக ரூ.530க்கு ஏற்றுமதி நிறுவனங்கள் கொள்முதல் செய்கின்றன. இதனால் கிலோவுக்கு ரூ.120 வரை வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. கடந்த 3 வாரங்களாக குறைவாக இருந்த இறால் வரத்து தற்போது கணிசமாக உயர்ந்துள்ளது. ஆனால் உரிய விலை இன்மையால் படகிற்கு தலா மாதம் ரூ.40 ஆயிரம் வருவாய் இழப்பு நீடிக்கிறது.

இது குறித்து விசைப்படகு மீனவர்கள் கூறுகையில், கிலோவுக்கு 32 பருமன் எண்ணிக்கையுடைய இறாலுக்கு ரூ.530 விலை நிர்ணயிக்கப்படுகிறது. பருமன் 35,38 என அதிகரிக்க விலையும் குறைகிறது. தடைக்காலம் நீக்கத்திற்கு பிறகு கடல் உணவு ஏற்றுமதி நிறுவனங்களுக்கு இடையே நிலவிய போட்டியால் இறால், நண்டு, கணவாய் மீன்களுக்கு உரிய விலை கிடைத்தது. விலையில் ஈடுகொடுத்த புதிய நிறுவனத்தை பிரதான நிறுவனங்கள் சமரசம் பேசி 'சிண்டிகேட்' அமைத்து கொண்டன. இதனால் ஏற்றுமதி நிறுவனங்கள் ஆண்டுக்கு கோடி கணக்கில் உபரி லாபம் அடைந்து வருகின்றன. மீனவர்களுக்கு நிரந்தர வருவாய்க்கு மத்திய, மாநில அரசுகள், கடல் உணவு ஏற்றுமதி பொருட்கள் வளர்ச்சி ஏஜன்சி நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றனர்.

## அமராவதி ஆயக்கட்டில், சாகுபடி தீவிரம் புது நெல்லு... புது நாத்து!சம்பா நடவுக்கு வேளாண்துறை தயார்

உடுமலை :நடப்பு சம்பா பருவத்தில், அமராவதி ஆயக்கட்டு பகுதியில், நெல் சாகுபடியில், விவசாயிகள் உயர் விளைச்சல் பெற புதிய நெல் ரக விதைகள் உட்பட அனைத்து தேவைகளும், துறை சார்பில், தயார் நிலையில், வைக்கப்பட்டுள்ளதாக, வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

உடுமலை பகுதியில், அமராவதி பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பகுதிகளில், அணைப்பாசனம் மற்றும் பருவமழை அடிப்படையில், சராசரியாக குறுவை பருவத்தில், 400 எக்டரும், சம்பா பருவத்தில், 450 எக்டர் என, 850 எக்டர் பரப்பில், நெல் சாகுபடி செய்யப்படுகிறது. தற்போது, 400 எக்டர் பரப்பில், கல்லாபுரம், பூச்சிமேடு, வேல்நகர், பூளவாடிபுதுார், மாவிளம்பாறை ஆகிய பகுதிகளில், குறுகிய கால நெல் ரகங்களான ஏஎஸ்டி 16, ஏடிடி 37, ஏடிடி 43 ஆகிய ரகங்கள், பயிரிடப்பட்டு, பயிர் வளர்ச்சி நிலையில் உள்ளது. இப்பகுதியில், 280 எக்டரில், விவசாயிகள், திருந்திய நெல் சாகுபடி முறையை பின்பற்றியுள்ளனர். நெல் சாகுபடிக்கு தேவையான, உரங்கள், பயிர்பாதுகாப்பு மருந்துகள் வினியோகம் ஆகியவை வேளாண்துறை அதிகாரிகளால், ஆய்வு செய்யப்பட்டு, பற்றாக்குறை தவிர்க்கப்பட்டுள்ளது.

துறை சார்பில், தொழில்நுட்ப பயிற்சிகளும், வழங்கப்பட்டு வருகின்றன. வடகிழக்கு பருவமழை துவங்க உள்ள நிலையில், அமராவதி அணை தண்ணீர் திறப்பு அடிப்படையில், புதிய ஆயக்கட்டு விவசாயிகளும், சம்பா சாகுபடிக்கு தயாராகி வருகின்றனர். இது குறித்து உடுமலை வட்டார வேளாண் உதவி இயக்குனர் மகாலிங்கம் கூறியதாவது: சம்பா பருவத்திற்கு ஏற்ற, புதிய நெல் ரகம் ஏடிடி(ஆர்) 49, சான்று பெற்ற விதைகள், 11 ஆயிரம் கிலோ, உடுமலை வேளாண் விரிவாக்க மையம் மற்றும் குறிச்சிக்கோட்டை துணை வேளாண் விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

இவ்விதைகள் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம் நெல் இயக்கத்தில், கிலோவிற்கு, 10 ரூபாய் மானிய விலையில், விவசாயிகளுக்கு வினியோகம் செய்ய தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. ஏடிடி(ஆர்) 49, ரகம், ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையத்தால், உருவாக்கப்பட்டு, கோவை வேளாண் பல்கலைகழகத்தால், 2011ம் ஆண்டு வெளியிடப்பட்ட புதிய ரகமாகும். இது பின்சம்பா மற்றும் தாளடி பருவத்தில், பயிர் செய்வதற்கேற்ப, 132 நாட்கள் வயதுடைய நடுத்தர சன்ன ரகமாகும்.

சிஆர்., 1009 மற்றும் சீரகச்சம்பா ஆகிய தாய் ரகங்களிலிருந்து, உருவாக்கப்பட்டதாகும். வெள்ளை அரிசியை உடைய, இந்த ரகம், அதிகபட்சமாக எக்டருக்கு, 10,250 கிலோ வரை மகசூல் தரக்கூடியதாகும். குலைநோய், இலையுறை அழுகல்நோய், இலையுறை கருகல் நோய், இலை சுருட்டு புழு மற்றும் பழுப்பு இலை புள்ளி நோய்க்கும், மிதமான எதிர்ப்பு திறன் உடையதாகும். சாப்பாட்டிற்கும், சிற்றுண்டி வகைகள் தயாரிப்பதற்கும், மிகவும் ஏற்ற ரகமாகும். பருக்கைகள் ஒன்றோடு ஒன்று ஒட்டாது பொலபொலவென இருக்கும்.

நடப்பு சம்பா பருவத்திற்கு, ஏடிடி(ஆர்) 49, சான்று பெற்ற விதைகளை கிலோவிற்கு, 10 ரூபாய் மானியத்தில், வேளாண் விரிவாக்க மையத்திலிருந்து, உதவி வேளாண் அலுவலர்களை அணுகலாம். கல்லாபுரம் பூச்சிமேடு பகுதிக்கு, உதவி வேளாண் அலுவலர் மார்க்கண்டன்- 98949-36328, எலையமுத்துார், பார்த்தசாரதிபுரம் பகுதிக்கு சங்கர்கணேஷ் 99428-86750, வலையபாளையம் பகுதிக்கு அமல்ராஜ் 93606-93660 என்ற மொபைல் எண்களில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அவர் கூறினார்.

## அக்.2ல் விவசாயிகள் பேரணி மோடியை சந்திக்க முடிவு

திருச்சி:"விவசாயிகளின் தற்கொலைக்கு முடிவு கட்டுவது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, பிரதமர் மோடியிடம் மனு அளிக்கப்படும்," என இந்திய விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு ஆலோசகர் செங்கல் ரெட்டி தெரிவித்தார்.கூட்டமைப்பு (சிபா) மாநில உயர்நிலைக்குழு கூட்டம் திருச்சியில் நடந்தது. பொதுச்செயலர் விருத்தகிரி வரவேற்றார். தமிழக தலைவர் 'அக்ரி'புத்திசிகாமணி தலைமை வகித்தார். செயல் தலைவர் எம்பாவை யோகநாதன், புரவலர் காசியண்ணன் முன்னிலை வகித்தனர்.

அகில இந்திய பொதுச்செயலர் போஜா தசரத ராமிரெட்டி பேசுகையில், “விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்க எம்.எஸ். சுவாமிநாதன் குழு பரிந்துரைகளை அமல்படுத்த வேண்டும். தனிநபர், தனி நிலம் பாதிப்புக்கு இழப்பீடு கிடைக்கும் வகையில் பயிர் காப்பீடு திட்டத்தை மாற்றி அமைக்க வேண்டும். கரும்பில் இருந்து நேரடியாக எத்தனால் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்,” என்றார்.

அகில இந்திய ஆலோசகர் செங்கல் ரெட்டி பேசுகையில், "கோரிக்கைகளை வலியுறுத்தி அக்., 2ல் டில்லி யில் பார்லி., நோக்கி விவசாயிகள் ஊர்வலம் சென்று, பிரதமர் மோடியை

சந்தித்து மனு அளிக்க உள்ளனர். இதில் விவசாயிகள் திரளாக கலந்து கொள்ள வேண்டும்,” என்றார்.அகில இந்திய கரும்பு உற்பத்தியாளர் சங்க தலைவர் குருபூர் சாந்தகுமார்

பேசுகையில், "நாடு முழுவதும் கரும்பு விவசாயிகளுக்கு நிலுவையில் உள்ள ரூ.20 ஆயிரம் கோடியை பெற்றுத்தர மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்,” என்றார்.

தேசிய நீர்வழிச்சாலை திட்ட தலைவர் காமராஜ் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார். செயலர் ராஜேந்திரன் நன்றி கூறினார்.

## பேரிடர் மேலாண்மை விழிப்புணர்வு

மாமல்லபுரம்:காஞ்சிபுரம் மாவட்டத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின்கீழ், சமுதாய அடிப்படையிலான பேரிடர் அபாய மேலாண்மை திட்டம், கடந்த மே மாதம் முதல், மீனவ பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.தற்போது, கூவத்துார் அடுத்த, பெருந்துறவு மீனவர் பகுதியில், இத்திட்ட பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. மாநில ஊரக வளர்ச்சி நிறுவன பயிற்சி முகாமில், பயிற்சி பெற்ற பயிற்றுனர்கள், தன்னார்வலர்களுக்கு, பேரிடர் ஆபத்து ஏற்படும்போது, கிராமவாசிகள் ஒருங்கிணைந்து, முதியோர், கர்ப்பிணிகள் ஆகியோரை மீட்பது, மற்றவர்களை காப்பது ஆகியவை குறித்து, பயிற்சி மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

மேலும், கிராமவாசிகளை கொண்டு, முதலுதவி குழு, தேடுதல் மற்றும் மீட்பு பணி குழு, முன்னெச்சரிக்கை குழு, புயல் பாதுகாப்பு மைய பராமரிப்பு குழு, இடம்பெயர்தல் குழு ஆகியவை ஏற்படுத்தப்பட்டன.பேரிடர் ஆபத்து பகுதி கண்டறியப்பட்டு, அது

குறித்த வரைபடம், பருவகால வரைபடம் தயாரிக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டன.

## பருவ மழை குறைவால் மானாவாரி கம்பு பயிர் விளைச்சல் பாதிப்பு

கள்ளக்குறிச்சி,: கள்ளக்குறிச்சி பகுதியில் பருவ மழை குறைவால் மானாவாரியாக விதைக்கப்பட்ட கம்பு பயிர்கள் எதிர்பார்த்த அளவு விளைச்சல் கிடைக்காததால், விவசாயிகள் அவதிப்பட்டு வருகின்றனர்.
கள்ளக்குறிச்சி பகுதியில் தென்மேற்கு பருவ மழையை நம்பி ஏராளமான விவசாயிகள் கம்பு பயிர் செய்திருந்தனர். போதிய மழையில்லாததால் அணைகள், ஏரிகள், குளங்கள், கிணறுகள் போன்றவற்றில் போதிய

அளவு பாசன நீர் கிடைக்கவில்லை. போர்வெல், கிணறு போன்ற பாசன வசதி உள்ள விளை நிலங்களின் பயிர்கள் மட்டும் தப்பிய நிலையில், ஏராளமான கரும்பு உள்ளிட்ட பயிர்கள் காய்ந்து போனது.

அதேபோல் மழையை நம்பி மானாவாரியாக பயிரிட் டிருந்த ஆயிரம் ஏக்கருக்கு மேல் சாகுபடி செய்திருந்த கம்பு, மணிலா போன்ற பயிர்களும் காய துவங்கியுள்ளது. குறிப்பாக கம்பு பயிர் செய்த விவசாயிகள் போதிய சாகுபடி இல்லாமல் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## 1,500 ஏக்கரில் காய்கறி, பழங்கள் சாகுபடி: குளிர்சாதன கிடங்கு அமைக்க கோரிக்கை

மேட்டூர்: கொளத்தூர் ஒன்றியத்தில், 1,500 ஏக்கர் பரப்பில் காய்கறி, பழங்கள் சாகுபடி செய்யும் நிலையில், இதுவரை குளிர்சாதன கிடங்கு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்காதது விவசாயிகளை விரக்தியில் ஆழ்த்தியுள்ளது.

மேட்டூர் தாலுகாவில், கொளத்தூர், மேச்சேரி, நங்கவள்ளி ஆகிய, மூன்று ஒன்றியங்கள் உள்ளது. இதில், மேச்சேரி ஒன்றியத்தில், 4,500 ஏக்கரில் தக்காளி சாகுபடி செய்யப்படுகிறது. ஆறு ஆண்டுக்கு முன்பு மேச்சேரியில், வேளாண்துறை சார்பில், 100 டன் கொள்ளளவு கொண்ட காய்கறி, பழங்களை பாதுகாக்கும் குளிர்சாதன கிடங்கு அமைக்கப்பட்டது. தற்போது, மேச்சேரி ஒன்றிய விவசாயிகள், வியாபாரிகள் குளிர்சாதன கிடங்கில் காய்கறி மற்றும் பழங்களை கெடாமல் சேமித்து வைத்து விற்பனை செய்கின்றனர். இந்நிலையில், கொளத்தூர் ஒன்றியத்தில், 1,000 ஏக்கரில் வாழை, 500 ஏக்கரில் மிளகாய், தர்பூசணி, கத்தரி, தக்காளி, மாதுளை உள்ளிட்ட காய்கறி மற்றும் பழங்கள் சாகுபடி செய்யப்படுகிறது. ஆனால், கொளத்தூரில் குளிர்சாதன கிடங்கு இல்லாததால், உற்பத்தி செய்யப்படும் காய்கறி, பழங்களை கெடாமல் இருப்பு வைத்து விவசாயிகளால் விற்பனை செய்ய

முடியவில்லை. அறுவடை செய்த காய்கறி, பழங்கள் ஓரிரு நாட்களில் கெட்டு விடும் என்பதாலும், குளிர்சாதன கிடங்கு இல்லாததாலும், வியாபாரிகள் நிர்ணயிக்கும் குறைந்தபட்ச விலைக்கு விவசாயிகள் விற்பனை செய்யும் அவலம் நீடிக்கிறது.

கொளத்தூர் ஒன்றிய கொ.நா.தே.ம.க., விவசாய அணி ஒன்றிய செயலாளர் மாதப்பன் கூறியதாவது: கொளத்தூர் ஒன்றியத்தில் சாகுபடி செய்யப்படும் காய்கறி, பழங்களை பாதுகாப்பாக இருப்பு வைக்க முடியாததால், ஆண்டுதோறும் சாகுபடி பரப்பளவு குறைந்து வருகிறது. மேச்சேரியில் ஏற்கனவே, ஆறு ஆண்டுக்கு முன்பு, காய்கறிகளை சேமிக்க, 100 டன் கொள்ளளவு குளிர்சாதன கிடங்கை அரசு கட்டியது. கொளத்தூரில் குளிர்சாதன கிடங்கு கட்ட அரசு நடவடிக்கை எடுக்காத நிலையில், இரு ஆண்டுக்கு முன்பு, மேச்சேரி குளிர்சாதன கிடங்கு அருகே, 25 டன் கொள்ளளவு கொண்ட மற்றொரு குளிர்சாதன கிடங்கையும் அரசு கட்டி கொடுத்துள்ளது, கொளத்தூர் பகுதி விவசாயிகளை மேலும் விரக்தியில் ஆழ்த்தியுள்ளது. கொளத்தூரில் வேளாண் ஒழுங்கு முறை விற்பனை கூடமும் வாடகை கட்டிடத்தில்தான் இயங்குகிறது. கொளத்தூரில் காய்கறி, பழங்கள் சாகுபடியை அதிகரிக்க, அரசு வேளாண் ஒழுங்கு முறை விற்பனை கூடமும், அதே வளாகத்தில், குளிர்சாதன கிடங்கும் கட்ட உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு, அவர் கூறினார்.

## வேளாண் விதைப்பண்ணையில் புதிய நெல் ரகங்கள் சாகுபடி

மேட்டூர்: மேட்டூர் வேளாண் விதைப்பண்ணையில், நடப்பாண்டு புதிய நெல் ரகங்கள் சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு, உற்பத்தி செய்யப்படும்

நெல் விதைகள், வரும் ஆண்டில் விவசாயிகள் வினியோகம் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சேலம் மாவட்டம், மேட்டூர் மற்றும் டேனீஸ்பேட்டையில் வேளாண் விதைப்பண்ணை உள்ளது. மேட்டூர் விதைப்பண்ணை, ஆண்டுதோறும், 40 ஏக்கரில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்படும். மேட்டூர் விதைப்பண்ணையில், 135 நாட்கள் வளரும், பொன்னிநெல், கோ.ஆர்., 50 மற்றும், 120 நாட்கள் வளரும், ஏ.டி.டி.,45, ஆகிய நெல் ரகங்கள் சாகுபடி செய்யப்படும். வழக்கமாக, சாகுபடி செய்யப்படும் நெற்பயிரை விட, கூடுதல் மகசூல் தரும் புதிய நெல் ரகங்களை வேளாண் பல்கலை கழகம் அறிமுகம் செய்துள்ளது. இதனால், மேட்டூர் வேளாண் விதைப்பண்ணையில், நடப்பாண்டு, வழக்கமான சாகுபடி செய்யப்படும் நெல் ரகங்களுக்கு பதிலாக, 135 நாட்கள் வளரும், ஏ.டி.டி.,49, 130 நாட்கள் வளரும் டி.ஆர்.ஒய்.,3, மற்றும் 120 நாட்கள் வளரும், கே.ஆர்.,51 ஆகிய மூன்று புதிய நெல் ரகங்கள் சாகுபடி செய்யப்படுகிறது. மேட்டூர் விதைப்பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் நெல் ரகங்கள், வரும் ஆண்டு விவசாயிகள் சாகுபடி செய்வதற்காக வினியோகம் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி முகாம்

நாமக்கல்: 'கால்நடை மருத்துவமனை வளாகத்தில், நாட்டுக்கோழி வளர்ப்பில், மூலிகை மருத்துவத்தின் மகிமை என்ற தலைப்பில், நாளை (செப்., 22) பயிற்சி முகாம் நடக்கிறது' என, ஆராய்ச்சி மையத் தலைவர் கோபாலகிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: நாமக்கல் கால்நடை மருத்துவமனை வளாகத்தில், கோழிகளுக்கான மரபு சார் மருத்துவ ஆராய்ச்சி மையம் சார்பில், பண்ணையாளர்களுக்கான நாட்டுக்கோழி

வளர்ப்பில் மூலிகை மருத்துவத்தின் முக்கியத்துவம் என்ற தலைப்பில், ஒரு நாள் இலவச பயிற்சி முகாம், நாளை (செப்., 22) மதியம், 2 மணிக்கு நடக்கிறது. பயிற்சி முகாமில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் பங்கேற்று பயன்பெறலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### பருவ மழை ஏமாற்றம்: துவரை விவசாயிகள் கவலை

லாலாபேட்டை: பருவ மழை பொய்த்ததால் கரூர் மாவட்டத்தில் மானாவாரி துவரை சாகுபடி செய்ய முடியாமல் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் யூனியன் பகுதிகளான பஞ்சப்பட்டி, வயலூர், சிவாயம், கருப்பத்தூர், சிந்தலவாடி, லட்சுமணப்பட்டியில் மானாவாரியாக துவரை சாகுபடி துவங்கியிருக்க வேண்டும். கடந்த மாதம் மழை குறைவாக பெய்ததால் உழவு பணியில் மட்டும் ஈடுபட்டனர். போதிய மழை பெய்யாததால் மானாவாரியாக விதைப்பு செய்ய முடியாமல், 10 ஆயிரம் ஏக்கர் வானம் பார்த்து கிடக்கிறது. இதனால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

### மல்லிகை பூ விளைச்சல் அதிகரிப்பு: விலை சரிவால் விவசாயிகள் கவலை

லாலாபேட்டை: மல்லிகை பூக்கள் விலை சரிவால் விவசாயிகள் கடும் நஷ்டம் அடைந்துள்ளனர். கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் யூனியனுக்கு உட்பட்ட மாயனூர், காட்டூர், செக்கனம், மலைப்பட்டி, திருக்காம்புலியூர், தொட்டியப்பட்டி, தாளியப்பட்டி, வரகூர் ஆகிய பகுதிகளில் மல்லிகை பூ சாகுடி நடக்கிறது. கடந்த மாதம் மல்லிகை பூக்கள் உற்பத்தி அதிகமானதால் கிலோ, 100 ரூபாய் என, விலை சரிந்தது. தற்போது புரட்டாசி மாதம் சுபமுகூர்த்தம் குறைவாக இருப்பதாலும், மல்லிகை உற்பத்தி அதிகரித்த நிலையில் விலை உயரவில்லை. இதனால் கொள்முதல் விலையும் உயர்த்தப்பட வில்லை. கிலோ மல்லிகைப்பூ, 80, முதல், 100 ரூபாய் என, விவசாயிகளிடம்

வாங்கி, கூடுதல் விலைக்கு விற்பனை செய்கின்றனர். பூ உற்பத்தி அதிகரித்தும், அது விவசாயிகளுக்கு கை கொடுக்கவில்லை.

## கால்நடை பாதுகாப்பு திட்ட சிறப்பு முகாம்

க.பரமத்தி: கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி அருகே மலைப்பட்டியில் சிறப்பு கால் நடை பாதுகாப்பு திட்ட முகாம் நடந்தது. பஞ்., தலைவர் பேரானந்தன் தலைமைவகித்தார். வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகளுக்கு நோய் தடுப்பூசி, பசு மற்றும் எரு மைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது. குடற் புழுநீக்கல், கருவூட்டல், மலடு நீக்கல், சினை பரிசோதனை உள்ளிட்ட சிகிச்சைகள் இலவசமாக அளிக்கப்பட்டது. டாக்டர்கள் சுமதி, ராஜேந்திரன், நாகராஜன் ஆகியோர் சிகிச்சையளித்தனர். இங்கு, 1,064 கால்நடைகளுக்கு இலவச சிகிச்சையளிக்கப்பட்டது. பெரியதிருமங்கலத்தில் நடந்த கால்நடை முகாமில் உதவி இயக்குநர் ராஜேந்திரன் தலைமைவகித்தார். டாக்டர்கள் கலைவாணி மோகன்ராஜ், கால்நடை ஆய்வாளர் ஜானகி ஆகியோர், 200 பசுமாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட்டனர். சிறந்த கலப்பின கிடேரிகளை வளர்த்த, 7 பேருக்கு பரி சு கள் வழங்கப்பட்டன.

## அமராவதி அணையிலிருந்து தண்ணீர் திறப்பால் ஆஹா ஆனந்தமே! பாசனப்பகுதியில், தீவிரமாகும் சாகுபடி பணிகள்

உடுமலை: உடுமலை அமராவதி அணையிலிருந்து, பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பாசனத்திற்கு, நேற்று தண்ணீர் திறக்கப்பட்டது. வடகிழக்கு பருவமழைக்கு முன்னர் தண்ணீர் திறந்துள்ளது, சம்பா நெல் சாகுபடிக்கு உதவியாக இருக்கும், என விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

திருப்பூர் மாவட்டம், உடுமலை அமராவதி அணை மூலம் திருப்பூர், கரூர் மாவட்டத்திற்குட்பட்ட, 55 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழையால்,

அணைக்கு கிடைக்கும் நீர் வரத்து அடிப்படையில், பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படும்.

பழைய ஆயக்கட்டு பாசனத்திற்கு, ஜூன் மாதத்திலும், புதிய ஆயக்கட்டு பாசனத்திற்கு, ஆக., மாதத்திலும் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட வேண்டும். இதனால், தலைமடை பகுதியில், மூன்று போக நெல் சாகுபடியும், புதிய ஆயக்கட்டு பகுதியில், கரும்பு மற்றும் தென்னை சாகுபடிகள் பயன்பெற்று வந்தன.

பருவமழை பொழிவு குறைவு, அணை துார்வாரப்படாதது உட்பட காரணங்களால், மூன்று போக நெல் சாகுபடி பாசனப்பகுதியில், காணாமல் போனது. இந்தாண்டு, புதிய ஆயக்கட்டு பாசனத்திற்கும், ஆக., மாதத்தில் தண்ணீர் திறக்கப்படவில்லை. இதனால், பாசன விவசாயிகள், சம்பா நெல் சாகுபடியை மட்டுமே நம்பியிருந்தனர். வடகிழக்கு பருவமழைக்கு முன்னர், அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டால், நாற்றுப்பண்ணை அமைத்து, நடவு பணிகளை மேற்கொள்ள முடியும்.

வடகிழக்கு பருவமழை துவங்கும் போது, பயிர் வளர்ச்சி தருணத்தில் இருக்கும்; மழைக்கு பிறகு, அணையில் இருப்பு வைக்கப்படும் தண்ணீரை கொண்டு, நெல் சாகுபடியை முழுமையாக்க முடியும் என விவசாயிகள் எதிர்பார்த்திருந்தனர். புதிய ஆயக்கட்டு பகுதியில், போதிய மழை இல்லாமல், வறட்சி நிலவியது, கரும்பு நடவு மற்றும் நீண்ட கால பயிரான தென்னைக்கு தண்ணீர் இல்லாமல் பாதிப்பு காணப்பட்டது.

எனவே, இரு ஆயக்கட்டு விவசாயிகளும், தண்ணீர் திறப்பு குறித்து ஒரு மாதத்திற்கும் மேல், கோரிக்கை விடுத்தனர். விவசாயிகள் கோரிக்கை அடிப்படையில், அமராவதி அணையிலிருந்து நேற்று காலை, 11:00

மணிக்கு, பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பகுதிக்கு தண்ணீர் திறக்கப்பட்டது.

பழைய ஆயக்கட்டு பாசனம்: திருப்பூர் மாவட்டம், அலங்கியம், தளவாய்பட்டணம், தாராபுரம், கொளிஞ்சிவாடி, நஞ்சத்தலையூர் மற்றும் சுண்டக்காம்பாளையம் ஆகிய வாய்க்கால் வழியாக, 8,416 ஏக்கர் நிலங்களும், கரூர் மாவட்டத்தில், சின்னதாராபுரம், நஞ்சைக்காளிக்குறிச்சி, வலது கரை மற்றும் இடது கரை வாய்க்கால் வழியாக, 13,451 ஏக்கர் நிலங்களும், பாசன வசதி பெறும்.

இப்பாசனத்திற்கு, அணையின் கீழ் மட்ட ஷட்டர் வழியாக ஆற்றில் தண்ணீர் திறக்கப்பட்டது. 10 நாட்களுக்கு, 1,123 மில்லியன் கன அடி தண்ணீர் வழங்கப்பட உள்ளது.

### புதிய ஆயக்கட்டு பாசனம்

திருப்பூர் மாவட்டம், உடுமலை, மடத்துக்குளம், தாராபுரம் தாலுகாவிற்குட்பட்ட, 25,250 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். அணையிலிருந்து பிரதான கால்வாய் வழியாக, 15 நாட்களுக்கு, 570 மில்லியன் கன அடி தண்ணீர் வழங்கப்படுகிறது. தண்ணீர் திறப்பையொட்டி, திரளான விவசாயிகள், அணை முகப்பிலுள்ள, அமராவதியம்மன் சிலைக்கு சிறப்பு பூஜைகள் செய்தனர்.

## இயற்கை உரமாக பயன்படும் வெள்ளைப்பூண்டு கழிவுகள்

பெரியகுளம் : பெரியகுளம் பகுதியில் குப்பைக்கு செல்லும் வெள்ளைப்பூண்டு கழிவுகளை, இயற்கை உரமாக விவசாயிகள் பயன்படுத்துவது அதிகரித்துள்ளது.

பெரியகுளம் அருகே வடுகபட்டி, தாமரைக்குளம் பகுதிகளில் வெள்ளைப்பூண்டு கழிவுகள் இயற்கை உரமாக அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது.இன்றைய சூழ்நிலையில் விவசாயிகள், உடனடி விளைச்சலுக்காக தொடர்ச்சியாக ரசாயன உரங்களை, அதிகளவில் பயன்படுத்துகின்றனர்.தொடர்ந்து ரசாயன உரங்கள் பயன்படுத்தப்பட்ட நிலம், ஐந்தாண்டுகளுக்கு பிறகு வளம் குறைந்து விடுவதால் விளைச்சல் பாதிக்கிறது. அதன் பிறகு விவசாயிகள் மண்பரிசோதனை செய்து வளத்தை அதிகப்படுத்த சிரமப்படுகின்றனர்.சிறிதளவாவது இயற்கைக்கு மாறும் விவசாயிகள் மண்ணை உழுது, இயற்கை உரங்களான மாட்டுச்சாணம், புண்ணாக்கு கரைசல், சணம்பு உட்பட கீரைச்செடிகளை போட்டு பயிர் செய்கின்றனர். இலவசமாக கிடைக்கும் இயற்கை உரமான வெள்ளைப்பூண்டு கழிவுகளை பயன்படுத்தி, அதிகளவு விளைச்சல் பெறுகின்றனர். விவசாயி சந்திரன் கூறுகையில், வெள்ளைப்பூண்டின் கழிவுகளை சேகரித்து, நிலத்தில் கொட்டி உழும் போது, மண்ணில் தீங்கு விளைவிக்கும் வேர்புழுக்கள் இறந்து விடுகின்றன. மண்ணின் வளமும் அதிகரிக்கிறது. இதனால் வாழை, கரும்பு, தென்னை, பயிர்களும் விளைச்சல் அதிகரிக்கும் என்றார்.

## பி.பி.டி., நெற்பயிரைக் காத்திட சாகுபடி மேலாண்மை முறை



கடலூர்: பி.பி.டி., நெற்பயிரை நோய் தாக்குதலில் இருந்து காத்திட சாகுபடி மேலாண்மை முறைகளை வேளாண் இணை இயக்குனர் தனசேகரன் தெரிவித்துள்ளார்.

அவரது செய்திக்குறிப்பு: மாவட்டத்தில் தற்போது, சம்பா நெற்பயிர் சாகுபடி நடைபெற்று வருகிறது. அதில், பி.பி.டி., ரக நெற் பயிர் பல்வேறு பூச்சி, பூஞ்சன மற்றும் பாக்டீரியாவால் ஏற்படும் நோய் தாக்குதலால் அதிகம் பாதிக்கக்கூடியது. குறிப்பாக இலைச்சுருட்டுப் புழு, புகையான், தண்டு துளைப்பான், பூஞ்சன நோய்களான இலைப்புள்ளி நோய், இலையுறை அழுகல், தண்டு அழுகல், பாக்டீரியல் நோய்களான இலைக் கருகல் நோய், குலை நோய் தாக்கி அதிகம் பாதிப்பு ஏற்படுத்தும்.

பயிர் வளர்ச்சி பருவத்தில் மப்பும், மந்தாரமான சூழ்நிலை, நிலத்தில் அதிக அளவு தண்ணீர் தேங்குவது, தேவைக்கு அதிகமான யூரியா இடுவதால் பூச்சி மற்றும் நோய் பரவுதலை அதிகரிக்கும். எனவே, பி.பி.டி மாற்று சன்ன ரகங்களான ஆடுதுறை-49, கோ (ஆர்)-51 ஆகியவற்ற மானிய விலையில் பெற்று சாகுபடி செய்ய விவசாயிகள் கேட்டக் கொள்ளப்படுகிறார்கள்.

தவிர்க்க முடியாத சூழலில் பி.பி.டி., ரகம் சாகுபடி செய்ய நேரிட்டால் கண்டிப்பாக ஒரு கிலோ விதைக்கு 'டிரைக்கோடர்மா விரிடி' அல்லது 'சூடோமோனாஸ்' இவற்றில் ஏதேனும் ஒன்றை 4 கிராம் வீதம் கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

மேலும், இவற்றில் ஏதேனும் ஒன்றை நடவு வயலில் ஏக்கருக்கு ஒரு கிலோ வீதம் 20 கிலோ தொழு உரம் அல்லது மணலுடன் கலந்து இட வேண்டும். தழைச்சத்து உரங்களை மண் ஆய்வு பரிந்துரை அடிப்படையில் 2 அல்லது 3 முறை பிரித்து இட வேண்டும்.

பூச்சி தாக்குதலைக் கட்டுப்படுத்த வேப்பங்கொட்டை சாறு கரைசலை ஒரு லிட்டர் தண்ணீரில் 5 மில்லி வீதம் கலந்து தெளிக்க வேண்டும். பூஞ்சை மற்றும் பாக்டீரியல் இலைக்கருகல் நோய் தாக்குதலை தடுக்க தகுந்த மருந்தை நட்ட 25 மற்றும் 50ம் நாட்களில் தெளிக்க வேண்டும். மேலும், விவரம் வேண்டுவோர் அருகில் உள்ள வேளாண் விரிவாக்க மையங்களை அணுகி தெரிந்து கொள்ளலாம்.

## காவிரி டெல்டா பகுதிகளில் முறைப்பாசனம்!, பற்றாக்குறையை சமாளிக்க ஏற்பாடு




கடலூர்: டெல்டா கடைமடைப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள தண்ணீர் பற்றாக்குறையை சமாளிக்க, காவிரி நீரை முறைப்பாசன முறையில் பகிர்ந்தளித்து பயிர்களை காப்பாற்ற அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

போதிய மழை இல்லாத காரணத்தினால் தமிழகத்திற்கு தண்ணீர் தர கர்நாடக அரசு மறுத்து வருவதால் மேட்டூர் அணையின் நீர் மட்டம்

வெகுவாக குறைந்துள்ளது. நேற்று முன்தினம் நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 74.12 அடியாக குறைந்தது. அணைக்கு வினாடிக்கு 825 கனஅடி அளவே தண்ணீர் வந்து கொண்டிருந்த நிலையில் அணையிலிருந்து 13 ஆயிரத்து 800 கனஅடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

கல்லணையில் இருந்து வெண்ணாறு மூலமாக திருவாரூர், நாகை மாவட்டத்திற்கும், ஜி.ஏ., அணைக்கட்டு மூலம் புதுக்கோட்டை மற்றும் தஞ்சை மாவட்டத்திற்கும், கொள்ளிடம் ஆறு மூலம் கடலூார், தஞ்சை மற்றும் நாகை மாவட்டத்திற்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது. மேட்டூர் அணையிலிருந்து திறந்து விடப்படும் தண்ணீரில் 10 சதவீதம் மட்டுமே கல்லணையில் இருந்து கொள்ளிடம் ஆறு மூலம் பாசனத்திற்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது.

அதனை கீழணையில் இருந்து தெற்கு ராஜன் வாய்க்கால் மூலம் நாகை மாவட்டத்திற்கும், குமுக்கி மண்ணியாறு மூலம் தஞ்சை மாவட்டத்தின் ஒரு பகுதிக்கும், வடக்கு ராஜன், வடவாறு மற்றும் வீராணம் மூலம் கடலூார் மாவட்டத்தில் டெல்டா பாசன பகுதியில் உள்ள ஒரு லட்சத்து 31 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கு பாய்ச்ச வேண்டும்.

இந்நிலையில் கடலூார் மாவட்டத்தில் டெல்டா பாசன பகுதியில் தற்போது சம்பா சாகுபடி பணி முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. பெரும் பகுதியில் நேரடி நெல் விதைப்பும், பிற பகுதியில் நாற்றங்கால் விட்டு நாற்று பறிக்கும் நிலையில் உள்ளது. இந்நிலையில், கீழணையில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு கணிசமாக குறைந்துள்ளதோடு, வெயிலின் தாக்கமும் அதிகமாக உள்ளதால், கடைமடை பகுதிகளில் போதிய தண்ணீர் இன்றி நாற்றுகள் கருகி வருகின்றன. இதனால், நடவு செய்த நெற்பயிரைக் காப்பாற்ற

தண்ணீரைக் கூடுதலாக திறந்து விட வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

ஆனால், மேட்டூர் அணையின் நீர் மட்டம் குறைவாக உள்ளதாலும், வடகிழக்குப் பருவமழை துவங்க நான்கு வாரம் ஆகும் என்பதாலும்; அதுவரை நடவு செய்துள்ள நெற்பயிரை காப்பாற்ற மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை தொடர்பாக நேற்று காலை, கலெக்டர் முகாம் அலுவலகத்தில் கலெக்டர் சுரேஷ்குமார் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடந்தது.

பொதுப்பணி மற்றும் வேளாண் துறை அதிகாரிகள் பங்கேற்ற இக்கூட்டத்தில், கல்லணைக்கு வரும் தண்ணீரில் நமது பங்கீடான 10 சதவீதம் முழுமையாக பெறப்பட்டு வருகிறது. இருப்பினும், வெயிலின் தாக்கம் அதிகம் உள்ளதால் தண்ணீர் தேவை அதிகரித்துள்ளது. இதனால், கடைமடை பகுதிகளுக்கு தண்ணீர் சென்றடைவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. பருவமழை துவங்க ஒரு மாதம் ஆகும். அதுவரை, தற்போது நமக்கு வந்து கொண்டுள்ள தண்ணீரை முறைப்பாசனம் செய்து பயிரை காப்பாற்ற முடிவு செய்யப்பட்டது.

அதனை ஏற்றுக் கொண்ட கலெக்டர், இதுகுறித்து டெல்டா பாசன பகுதி விவசாயிகளிடம் கருத்தை கேட்டு அவர்களின் ஒத்துழைப்புடன் முறைப்பாசன முறையை செயல்படுத்த உத்தரவிட்டார். அதன்பேரில் விவசாயிகளிடம் கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்த பொதுப்பணி துறை அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

## பப்பாளியில் தேமல் நோய் கட்டுப்படுத்த ஆலோசனை

தேனி : பப்பாளியில் தேமல் நோய் பாதிப்பிற்குள்ளான செடிகளை வெட்டி அப்புறப்படுத்த வேண்டும் என தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் ராஜன் தெரிவித்துள்ளார்.

அவர் கூறியதாவது: தேனி மாவட்டத்தில் 232 எக்டேரில் பப்பாளி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பப்பாளியில் வீரிய ஒட்டு ரகமான சிவப்பு நிறத்திலான ரெட்லேடி, ரெட் ராயல், ஜிண்டா ரகரங்கள் சாகுபடி செய்யப்படுகிறது.தற்போது பப்பாளியில் வைரஸ் நோய் பாதிப்பு ஏற்படுகிறது. இலைகளில் சாறு உறிஞ்சும் பூச்சிகள் படர்ந்து தேமல் நோய் பாதிப்பு ஏற்படுத்தும். இப்பாதிப்பால் இலைகளின் அளவு குறையும். மரங்களின் ஆயுள் குறையும். நோய் பாதித்த ஒரு ஆண்டில் மகசூல் குறைந்து இழப்பு ஏற்படும். இந்நோய் பாதித்த பப்பாளி பழம் ருசிகுறைந்து சலசலப்பாக இருக்கும்.எனவே, பப்பாளி சாகுபடி செய்த விவசாயிகள் நடவு காலத்தில் இருந்தே பூச்சி தேமல் நோய் பூச்சி தாக்குதல் உள்ளதா என கண்காணிக்க வேண்டும். இதனை தடுக்க 20 நாட்களுக்கு ஒருமுறை பயிர் பாதுகாப்பு மருந்துகள் தெளிக்க வேண்டும். இந்நோய் வந்த பிறகு பயிரை காப்பாற்ற முடியாது. நோய் தாக்கிய மரங்களை வெட்டி அப்புறப்படுத்த வேண்டும். மரத்தை வெட்டுவதற்கு பயன்படுத்திய அரிவாள் போன்ற ஆயுதங்களை அடுத்து பயன்படுத்துவதற்கு முன் நீரில் நன்கு கழுவி பயன்படுத்த வேண்டும், என்றார்.

## விதைத்த நெல்லை காப்பாற்ற தண்ணீருக்கு விலைபேசும் விவசாயிகள்

ஆர்.எஸ்.மங்கலம் : பருவமழை பெய்யாததால் ஆர்.எஸ்.மங்கலம் பகுதியில் நெல் விதைப்பு செய்துள்ள விவசாயிகள் விதை முளைப்பதற்காக தண்ணீரை விலைக்கு வாங்கி பாய்ச்சி வருகின்றனர்.

ஆர்.எஸ்.மங்கலம், சவேரியார் பட்டிணம், சனவேலி, புல்லமடை, வல்ல மடை, ஆனந்தூர், ராதானூர் உள்ளிட்ட பகுதிகளில் கடந்த இரண்டு வாரங் களுக்கு முன் பெய்த மழையை பயன் படுத்தி விவசாயிகள் நெல் விதைப்பு செய்தனர். தொடர்ந்து மழை பெய்யாததால்

ஏமாற்றமடைந்துள்ள விவசாயிகள் விதைகள் முளைப்பதற்காக பண்ணை குட்டைகளில் தேங்கிய மழைநீரை ஒருமணி நேரத்துக்கு ரூ.100 வீதம் விலைக்கு வாங்கி நிலங்களில் பாய்ச்சி வருகின்றனர். இது குறித்து சவேரியார்பட்டிணத்தை சேர்ந்த விவசாயி வேதசின்னப்பன் கூறிய தாவது: ஆர்.எஸ்.மங்கலம் சுற்றுவட்டாரப் பகுதிகளில் அண்மையில் பெய்த மழையால் விளைநிலங்களில் ஈரப்பதம் நிலவியது. தொடர்ந்து மழை பெய்வதற் கான அறிகுறிகள் தென்பட்டதால் விதைப்பு செய்தோம். ஒரு வாரமாக மழை பெய்யாததால் விதைநெல் முளைப்புத் திறன் குறைந்துள்ளது. வேறுவழியின்றி பண்ணை குட்டைகளில் தேங்கியுள்ள மழை தண்ணீரை விலை கொடுத்து வங்கி பாய்ச்சி வருகிறோம் என்றார்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை

**தினமணி**

நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**செப்டம்பர் 23 வரை மழை தொடரும்**

கடும் வெப்பமும், புழுக்கமும் கலந்த தட்பவெப்ப நிலை நிலவி வரும் தில்லியில் வரும் 23-ஆம் தேதி வரை ஆங்காங்கே இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.

தில்லியில் கடந்த சில நாள்களாக வெப்பம் அதிகரித்து புழுக்கம் இருந்து வருகிறது. வெள்ளி, சனி ஆகிய இரு தினங்களிலும் அவ்வப்போது வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது.

இந்த நிலையில் சனிக்கிழமை காலையில் சில இடங்களில் தூறல் மழை பெய்தது. இதைத் தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை காலையில் வானம்

மேகமூட்டத்துடன் காணப்பட்டது. சில இடங்களில் தூறல் மழை இருந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரி கூறியது: குஜராத் பகுதியில் ஏற்பட்டுள்ள காற்று அழுத்த தாழ்வு மண்டலம் வடக்கு நோக்கி நகரத் தொடங்கி பலவீனமடைந்து வருகிறது. இதனால் தில்லி, அதன் சுற்றுப்புறங்களில் மேலும் சில நாள்களுக்கு லேசான மழை தொடரும். தில்லி மற்றும் தேசியத் தலைநகர் வலய (என்சிஆர்) பகுதிகளில் ஆங்காங்கே செப்டம்பர் 23-ஆம் தேதி வரை லேசான, மிதமான மழை பெய்யக் கூடும். மழையின் தாக்கம் திங்கள்கிழமை அதிகமாக இருக்கும் என்றார் அவர்.

இந்த வாரம் திங்கள்கிழமை முதல் சனிக்கிழமை வரை குறைந்தபட்ச வெப்பநிலை 26-27 டிகிரி செல்சியாஸாகவும், அதிகபட்ச வெப்பநிலை 33 முதல் 36 டிகிரி செல்சியஸாகவும் இருக்கும். திங்கள் முதல் புதன்கிழமை வரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். ஆங்காங்கே இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது. ஆனால், வியாழன் முதல் சனிக்கிழமை வரை வானம் தெளிவாகக் காணப்படும் என்று வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.

## விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்த தோட்டக்கலை கல்லூரி மாணவிகள்

போடி அருகே தோட்டக்கலைக் கல்லூரி மாணவிகள் விவசாயிகளுக்கு செயல்முறை விளக்கப் பயிற்சி அளித்தனர்.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவிகள், கிராம தங்கல் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்று வருகின்றனர். இதில், மாணவிகள் பாரதி, விக்னேஷ்வரி, விஜயலட்சுமி, ஸ்ரீசந்தியா, சபிதா, சித்ரா, விவேகா, சரண்யா, சிருஷ்டி

ஆகியோர் விவசாயிகளுக்கு பல்வேறு பயிற்சிகளை அளித்து வருகின்றனர்.

இவர்கள், போடி கூழையனூர், டொம்புச்சேரி விவசாயிகளுக்கு அசோலா எனப்படும் மூக்குத்தி செடி வளர்ப்பு, காளான் வளர்ப்பு, மஞ்சள் நிற கவர்ச்சி அட்டை ஆகியவை குறித்து செயல் விளக்கம் அளித்தனர். மேலும், மாடித் தோட்டம் அமைப்பது குறித்தும் விளக்கினர். விவசாயிகள் லட்சுமி, சேகர் ஆகியோர் வழிகாட்டினர். தொடர்ந்து, விசுவாசபுரத்தில் விவசாயிகளுக்கு அங்கக வேளாண்மையின் மூலம் மாடித் தோட்டம் அமைப்பது குறித்து செயல் விளக்கக் கூட்டம் நடத்தப்பட்டது. இதில், மாடித் தோட்டம் அமைப்பதற்கு தேவையான பொருள்கள், இடம், பாட்டில் நாற்றாங்கால் முறையில் நெல் நடவு ஆகியன குறித்து விளக்கினர். நிகழ்ச்சியில், விவசாயிகள் பலரும் பங்கேற்றனர்.

## விவசாயத் தொழிலாளியின் குடும்பத்துக்கு நிதியுதவி

பொள்ளாச்சி அருகே கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்த விவசாயத் தொழிலாளியின் குடும்பத்துக்கு உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ரூ.1.20 லட்சத்துக்கான காசோலையை சட்டப்பேரவை துணைத் தலைவர் பொள்ளாச்சி வ.ஜெயராமன் சனிக்கிழமை வழங்கினார்.

பொள்ளாச்சியை அடுத்த ஏரிப்பட்டியைச் சேர்ந்த விவசாயத் தொழிலாளி மயில்சாமி(40). இவர் கடந்த சனிக்கிழமை, ஏரிப்பட்டியில் உள்ள ஒரு தோட்டத்தில் வேலை செய்தபோது கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்தார்.

இதையடுத்து, அவரது குடும்பத்துக்கு உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ரூ.1.20 லட்சத்துக்கான காசோலையை சட்டப்பேரவை துணைத் தலைவர் பொள்ளாச்சி வ.ஜெயராமன் சனிக்கிழமை வழங்கினார்.

## செப்.23-இல் விவசாயிகள் குறைதீர்க் கூட்டம்

உடுமலை வருவாய்க் கோட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்க் கூட்டம் புதன்கிழமை (செப்டம்பர் 23) நடைபெறவுள்ளது.

இதுகுறித்து கோட்டாட்சியர் அ.சாதனைக்குறள் வெளியிட்ட செய்திக் குறிப்பு:உடுமலை வருவாய்க் கோட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்க் கூட்டம் புதன்கிழமை காலை 11 மணி அளவில் உடுமலை வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. அனைத்துத் துறை அதிகாரிகள் கலந்து கொள்ளும் இக்கூட்டத்தில் உடுமலை, மடத்துக்குளம் வட்டத்தில் உள்ள விவசாயிகள் பங்கேற்கலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமராவதி அணையில் இருந்து தண்ணீர் திறப்பு: 47,117 ஏக்கர் பயன் பெறுகிறது

உடுமலையை அடுத்துள்ள அமராவதி அணையில் இருந்து பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பாசனப் பகுதிகள் பயன் பெறும் விதத்தில் சனிக்கிழமை தண்ணீர் திறக்கப்பட்டது.

கடந்த சில வாரங்களாக அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்து வருகிறது. இதனால் அணையின் நீர் மட்டம் 68 அடியை தாண்டியது. இந்நிலையில், பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு நிலங்களுக்கு தண்ணீர் திறந்து விட வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்து வந்தனர். இந்நிலையில், அமராவதி அணையில் இருந்து தண்ணீர் திறந்து விட முதல்வர் ஜெயலலிதா வெள்ளிக்கிழமை உத்தரவிட்டிருந்தார். இதன்படி, சனிக்கிழமை காலை 11 மணியளவில் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது.

இதில், வனத்துறை அமைச்சர் எம்.எஸ்.எம்.ஆனந்தன் அணையை திறந்து வைத்தார். சட்டப்பேரவை துணைத் தலைவர் பொள்ளாச்சி வி.ஜெயராமன், கேபிள் டிவி வாரியத் தலைவர் கே.ராதாகிருஷ்ணன், திருப்பூர் மாவட்ட ஆட்சியர் கு.கோவிந்தராஜ், மடத்துக்குளம் எம்எல்ஏ சி.சண்முகவேலு, மாவட்ட ஊராட்சித் தலைவர் எம்.சண்முகம் மற்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதுகுறித்து பொதுப் பணித்துறை அதிகாரிகள் கூறியது:பழைய ஆயக்கட்டு பாசனப் பகுதிகளுக்கு ஆற்றில் இருந்து முதல் 2 நாள்கள் 2 ஆயிரம் கன அடியும், அடுத்த 2 நாள்களுக்கு 1,500 கன அடியும், அதன் பிறகு தொடர்ந்து 6 நாள்களுக்கு 1,000 கன அடியும் தண்ணீர் திறந்து விடப்படும்.

இதில், திருப்பூர் மாவட்டத்தில் 8 ஆயிரத்து 416 ஏக்கர், கரூர் மாவட்டத்தில் 13 ஆயிரத்து 451 ஏக்கர் என மொத்தம் 21 ஆயிரத்து 867 ஏக்கர் பயன்பெற உள்ளது. புதிய ஆயக்கட்டு பாசன பகுதிகளுக்கு புது வாய்க்கால் மூலம் 440 கன அடி திறந்து விடப்பட்டுள்ளது. இதன் மூலம் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள உடுமலை, மடத்துக்குளம், தாராபுரம் வட்டங்களில் உள்ள 25,250 ஏக்கர் பாசன வசதி பெறுகிறது. இது மொத்தம் 15 நாள்களுக்கு திறந்து விடப்படும் என்றனர்.

**தானிய ஈட்டுக் கடன்: மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி சாதனை**

தானிய ஈட்டுக் கடனில் எந்த மாவட்டத்திலும் இல்லாத அளவுக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விட 113 சதவீத இலக்கை எட்டி ஈரோடு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி சாதனை படைத்துள்ளது.

இதுகுறித்து ஈரோடு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் கிருஷ்ணராஜ் விடுத்த செய்திக் குறிப்பு:

தமிழக அரசின் மூலம் வைப்புகள் திரட்டுதல், கடன் வழங்குதல் மற்றும் வசூலித்ததில் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி சிறப்பாக செயல்பட்டு வருகிறது. 2014, ஏப்ரல் 1-ஆம் தேதி முதல் 2015 மார்ச் 31-ஆம் தேதி வரை மத்திய வங்கி அளவில் வைப்புகள் சேகரிக்க குறியீடாக ரூ. 1,366 கோடி நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால், அதையும் தாண்டி ரூ.1,455 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

நிர்ணயிக்கப்பட்ட இலக்கைவிட அதிகம் ரூ. 89.33 கோடி அதிகம் எய்தியுள்ளது. 2014-15-ஆம் ஆண்டு பயிர்க்கடன் வழங்க மொத்தம் ரூ.

388 கோடி ஆகும். கடந்த 31.3.2015 வரை 6,589 பேருக்கு ரூ.394.48 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

உறுப்பினர்களுக்கு வழங்கும் மத்திய காலக்கடன் வட்டி விகிதம் 13 சதவீதத்தில் இருந்து 11.50 சதவீதமாக குறைக்கப்பட்டு உள்ளதால் அதிகளவு கடன்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தானிய ஈட்டு கடன் வழங்க நமது வங்கிக்கு மாநிலத்திலேயே அதிக அளவாக ரூ. 45 கோடி குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதில் 31.3.2015 வரை ரூ. 51.07 கோடி வழங்கப்பட்டு 113 சதவீதம் எய்தப்பட்டு உள்ளது என்றார்.

## இலவச கோமாரி நோய் தடுப்பூசி முகாம்

முதுமலை புலிகள் காப்பக நிர்வாகம் சார்பில், சுற்றுப்புற கிராமங்களில் உள்ள கால்நடைகளுக்கு இலவச கோமாரி நோய் தடுப்பூசி முகாம் சனிக்கிழமை நடைபெற்றது.

புலிகள் காப்பகத்தைச் சுற்றியுள்ள மாயார், மசினகுடி, முதுமலை, தொரப்பள்ளி, குனில்வயல் போன்ற கிராமங்களில் உள்ள கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி, இலவச குடல்புழு நீக்கம் உள்ளிட்ட பல்வேறு சிகிச்சைகள் அளிக்கப்பட்டன.

இம்முகாமிற்கு, நீலகிரி மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் தங்கவேல் தலைமை வகித்தார். உதவி இயக்குநர் ஜெகன்மோகன், கூடலூர் பகுதிக்கான உதவி இயக்குநர் அன்வர்தீன், முதுமலை புலிகள் காப்பக கால்நடை மருத்துவர் விஜயராகவன், வனச்சரக அலுவலர் காந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## நெல் தட்டு நாற்றங்கால் முறை:வேளாண் இணை இயக்குநர் ஆய்வு

திருவண்ணாமலையை அடுத்த நல்லவன்பாளையம் கிராமத்தில் இயந்திரம் மூலம் நடவு செய்யப்படவுள்ள நெல் தட்டு நாற்றங்கால் முறையை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ச.பா.நடேசன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

நல்லவன்பாளையம் கிராமத்தில் கருணாநிதி என்ற விவசாயி இயந்திரம் மூலம் நெல் நடவு செய்ய தட்டு நாற்றாங்கால் முறையை அமைத்துள்ளார். இதை திருவண்ணாமலை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ச.ப.நடேசன் சனிக்கிழமை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அப்போது விவசாயிகளிடம் அவர் கூறியது:

இயந்திரம் மூலம் நெல் நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஒரு எக்டருக்கு பின்னேற்பு மானியமாக ரூ. 3 ஆயிரம் வழங்கப்படும். திருவண்ணாமலை வட்டாரத்தைச் சேர்ந்த விவசாயிகள் தங்களது வங்கி கணக்கு எண், ஆதார் அடையாள அட்டை எண் ஆகிய விவரங்களுடன் வட்டார வேளாண்மை உதவி இயக்குநரை அணுகி இந்தத் திட்டத்தின் கீழ் பயன்பெறலாம் என்றார்.

ஆய்வின்போது, வேளாண்மை துணை இயக்குநர் (மத்திய அரசுத் திட்டம்) அ. பாலா, வேளாண்மை உதவி இயக்குநர் கோ. கண்ணகி, வேளாண்மை அலுவலர் லோ. அனுராதா, உதவி வேளாண் அலுவலர்கள் கோவிந்தன், முருகன், கவுஸ்கான் ஆகியோர் உடனிருந்தனர்.

## கறவை மாடு, ஆடுகளுக்கு தீவன தயாரிப்பு: நாளை இலவச பயிற்சி

நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் செவ்வாய்க்கிழமை (செப்.22) கறவை மாடு, ஆடுகளுக்கு சொந்தமாகத் தீவனம் தயாரிப்பது குறித்த ஒருநாள் இலவச பயிற்சி முகாம் நடைபெறுகிறது.

இதுகுறித்து பயிற்சி மைய ஒருங்கிணைப்பாளர் பி.மோகன் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

நாமக்கல் - மோகனூர் சாலை கால்நடை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்தில் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கறவைமாடு, வெள்ளாடு, செம்மறியாடுகளுக்கு சொந்தமாகத் தீவனம் தயாரிக்கும் முறைகள் என்ற தலைப்பில் ஒரு நாள் இலவச பயிற்சி முகாம் நடைபெறுகிறது.

இப் பயிற்சி முகாமில் கறவைமாடு, வெள்ளாடு, செம்மறியாடுகளுக்கான தீவன மேலாண்மை, தீவன அளவுகள், சொந்தமாக தீவனம் தயாரிக்கும் முறைகள் குறித்து விரிவாக பயிற்சியளிக்கப்படுகிறது.

இம் முகாமில் விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள், ஆர்வமுள்ளவர்கள் பங்கேற்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**காய்கறி நாற்று உற்பத்தி: நாளை இலவசப் பயிற்சி**

குழித்தட்டு முறையில் தக்காளி, மிளகாய், கத்தரி நாற்றுகள் உற்பத்தி மற்றும் சாகுபடித் தொழில்நுட்பங்கள் என்ற தலைப்பில் ஒரு நாள் இலவசப் பயிற்சி முகாம் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் திங்கள்கிழமை (செப்.21) காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

திட்ட ஒருங்கிணைப்பாளர் பி.மோகன் வெளியிட்ட செய்திக் குறிப்பு: இப்பயிற்சி முகாமில் கத்தரி, தக்காளி மற்றும் மிளகாயில் உள்ள வீரிய ஒட்டு ரகங்கள், குழித்தட்டு முறையில் நாற்று உற்பத்தி, இரட்டை வரிசை நடவு முறை, பயிர் இடைவெளி, சொட்டு நீர்ப்பாசனம் அளிக்கும் முறைகள், நீர்வழி உரமிடல், களை நிர்வாகம், மண்ணின் ஈரப்பதத்தைப் பாதுகாக்கும் தொழில் நுட்பங்கள், ஊட்டச்சத்து குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் முறைகள் மற்றும் பூச்சி நோய் நிர்வாக முறைகள் உள்ளிட்ட அனைத்துத் தொழில்நுட்பங்களும் விரிவாகக் கற்றுத் தரப்படும்.

முகாமில் விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம்.

விருப்பமுள்ளவர்கள் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்துக்கு நேரில் வந்தோ அல்லது 04286-266345 என்ற தொலைபேசி எண்ணிலோ பெயரை முன் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

**மானியத்துடன் கால்நடை தீவனப்பயிர் உற்பத்தி மேற்கொள்ள வலியுறுத்தல்**

அரசின் மானியத்துடன் கால்நடை தீவனப்பயிர் உற்பத்தி மேற்கொள்ளுமாறு அரியலூர் மாவட்ட விவசாயிகளை ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கால்நடைகளுக்கான பசுந்தீவனத்தின் தேவைக்கும் உற்பத்திக்கும் இடையே மிகப்பெரிய இடைவெளி உள்ளது. ஆகவே, கால்நடைப் பராமரிப்புத் துறையின் மூலம் நிகழாண்டில் அரசு மானியத்துடன் கூடிய தீவனப்பயிர் சாகுபடித் திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன.

இறவையில் பல்லாண்டு தீவன சோளம் (இர்ஊ ந 29) மற்றும் வேலிமசால் தீவனப்பயிர் சாகுபடி செய்திட விதைகள் வழங்குதல்.

தீவனச் சோளம் மற்றும் தீவனத் தட்டைப்பயறு சாகுபடி செய்திட தீவன விதைகள் வழங்குதல், தெளிப்பு நீர்ப்பாசன கருவிகள் நிறுவ விவசாயிகளுக்கு ரூ. 18,750 (75%) மானியம் வழங்குதல்,

மர வகை தீவனங்களான பூவரசு, வாகை, கல்யாண முருங்கை, வேம்பு, கொடுக்காபுலி போன்ற மரக்கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்குதல்,

அசோலா திடல் அமைக்க ரூ. 1,600 மானியம் (100% மானியம்) (அதிகபட்சம் 2 அசோலா அலகுகள்)

மேலும்,தீவனப்பயிர் அதிக அளவில் கிடைக்கும் காலங்களில் அவற்றை சேகரித்து,பதப்படுத்தி,ஊறுகாய் புல்(நண்ப்ஹஞ்ங்)தயாரித்து தீவனப்பற்றாக்குறை காலங்களில் வழங்குவதற்கு 250 கிலோ கொள்ளளவு உடைய 4 சைலேஜ் பைகள் ஒரு விவசாயிக்கு இலவசமாக வழங்கப்படும். பயன்பெற விரும்பும் விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள உதவி இயக்குநர் (அ) கால்நடை உதவி மருத்துவரை நேரில் தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என அந்தச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பயிர் விளைச்சல் போட்டி: புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் பங்கேற்க முன் பதிவு செய்யலாம்**

மாவட்ட மற்றும் மாநில அளவிலான பயிர் விளைச்சல் போட்டியில் பங்கேற்க விரும்பும் புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் முன் பதிவு செய்ய வேண்டுமென வேளாண்துறை அறிவுறுத்தியுள்ளது.

இது குறித்து புதுக்கோட்டை வேளாண் இணை இயக்குநர் த. சந்திரசேகரன் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தமிழகத்தில் உணவு உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் மாநில அரசு சிறந்த சாகுபடி முறைகளைக் கடை பிடிக்கும் விவசாயிகளை ஊக்குவித்து உற்பத்தித் திறன், விளைச்சலை உயர்த்தும் நோக்கில் மாநில, மாவட்ட அளவிலான பயிர் விளைச்சல் போட்டிகளை ஆண்டுதோறும் நடத்தி வருகிறது. அதன்படி புதுக்கோட்டை மாவட்டத்தில் சம்பா நெல் மற்றும் இறவை நிலக் கடலை பயிரில் மாநில அளவில் பயிர் விளைச்சல் போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் விவசாயிகள் முன் பதிவு செய்ய வேண்டும்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் நடப்பாண்டில் மாவட்ட அளவில் நடத்தப்படும் சம்பா நெற் பயிர் விளைச்சல் போட்டியில் கலந்து கொள்ளும் விவசாயிகள் திருந்திய நெல் சாகுபடி முறையில் சாகுபடி செய்திருத்தல் வேண்டும். இப்போட்டியில் கலந்து கொள்ளும் விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண் விரிவாக்க மையத்தைத் தொடர்பு கொண்டு நெல் பயிருக்கு ரூ.100 -ம், நிலக்கடலைக்கு ரூ.50-ஐயும் முன் பதிவு கட்டணமாக செலுத்த வேண்டும்.

போட்டியில் கலந்து கொள்ளும் விவசாயிகள் குறைந்தது 50 சென்ட் சாகுபடி நெல் பயிரில் செய்திருக்க வேண்டும் மாவட்ட அளவில் அதிக மகசூல் செய்துள்ள விவசாயிகளுக்கு முதல் பரிசு ரூ. 15 ஆயிரமும், இரண்டாவது பரிசு ரூ. 10 ஆயிரமும் வழங்கப்படவுள்ளது.

**சிறப்பு விருது:**

நடப்பாண்டில் மாநில அளவில் திருந்திய நெல் சாகுபடி முறையில் அதிக மகசூல் செய்துள்ளம் விவசாயிகளுக்கு ரூ. 5 லட்சம் ரொக்கம், ரூ. 3,500 - மதிப்புள்ள பதக்கமும் குடியரசு தின விழாவில் தமிழக முதலமைச்சரால் வழங்கப்படும்.

இந்த போட்டியில் கலந்து கொள்ளும் விவசாயிகள் முன் பதிவு கட்டணமாக ரூ. 150-ஐ தங்கள் பகுதியில் உள்ள வேளாண் விரிவாக்க மையத்தில் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளலாம்.

இப்போட்டியில் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு விருதுகள் வரும் ஆண்டில் வழங்கப்படும். இந்த விருது போட்டியில் கலந்து கொள்ளும் விவசாயிகள் பயிர் விளைச்சல் போட்டியில் கலந்து கொள்ள போட்டி விதிமுறைகளை அறிய தங்கள் பகுதி வேளாண்மை விரிவாக்க மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

**விவசாயிகளுக்கு பயிறு அறுவடைக்குப்பின் செய்நேர்த்தி பயிற்சி**

புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மைத் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை இணைந்து விவசாயிகளுக்கான பயிற்சி முகாமை அன்னவாசல் வட்டாரத்தில் அண்மையில் நடத்தின.

மாநில விரிவாக்க உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ், பயிறு அறுவடைக்குப்பின் செய்நேர்த்தி மற்றும் மதிப்பு கூட்டுதல் பயிற்சி மாவட்ட அளவில் 80 விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டது.

இலுப்பூரில், துணை இயக்குநர் முகம்மது அப்துல் நசீர் (வணிகம்) தலைமையில் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. ஒரு நாளில் 40 விவசாயிகள் வீதம் 2 நாள்களில் 80 விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

பயிற்சியில், விவசாயிகளுக்கு உளுந்தம் கஞ்சி தயாரித்தல் மற்றும் வேகவைத்த மதிப்பு கூட்டிய பச்சைபயறு தயாரிப்பு முறையை வம்பன் வேளாண் அறிவியல் நிலைய உதவிப் பேராசிரியர் கீதா, மதியழகன் ஆகியோர் செயல்விளக்கம் அளித்தனர்.

## "மண்வளம் அறிந்து உரமிட்டால் அதிக மகசூல் பெறலாம்'

மண்வளம் அறிந்து அதற்கேற்ப சமச்சீர் உரமிட்டால் அதிக மகசூல் பெறலாம் என்றார் அரியலூர் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் நா. பன்னீர்செல்வம்.

அரியலூர் மாவட்டம், தா.பழூர் வட்டாரம், கோடாலிகருப்பூர் கிராமத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விழாவில் 70 விவசாயிகளுக்கு மண்வள அட்டைகளை வழங்கி அவர் மேலும் பேசியது: தேசிய மண்வள அட்டை இயக்கம் 2015-16 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் அனைத்து விவசாயிகளுக்கும் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை விவசாயிகள் வயல்களிலிருந்து மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு மண்வள அட்டை வழங்கப்பட்டு வருகின்றது.அரியலூர் மாவட்டத்தில் அனைத்து வட்டாரங்களிலும் உள்ள 195 வருவாய் கிராமங்களில் 2015-16 முதல் 2017-18 முடிய மொத்தம் 26,116 மண் மாதிரிகள் சேகரிக்கத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. நிகழாண்டில் 69 வருவாய் கிராமங்களில் 6,888 மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு 3,310 மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

இம்மண்வள அட்டை பரிந்துரை மூலம் பயிர்களுக்கு தேவையான சத்துகளின் தேவை அறிந்து உரமிட்டு மண்வளத்தை பாதுகாக்க முடியும். உரத்துக்கான செலவையும் குறைக்கலாம். எனவே விவசாயிகள் அனைவரும் உரப் பரிந்துரையின் படி உரம் இட்டு செலவை குறைத்து அதிக லாபம் பெறலாம் என்றார் அவர். இந்நிகழ்ச்சியில் அரியலூர் மாவட்ட தரக்கட்டுப்பாடு வேளாண்மை உதவி இயக்குநர் க.முரளிதரன், தா.பழூர் வேளாண்மை உதவி இயக்குநர் பழனிசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## எருக்கூர் ஊராட்சியில் சீமைக் கருவேல மரங்கள் அழிப்பு

சீர்காழியை அடுத்த எருக்கூர் ஊராட்சியில் சீமைக் கருவேல மரங்களை அழிக்கும் பணி சனிக்கிழமை தொடங்கியது.

நாகை மாவட்டத்தில் முதல் முறையாக எருக்கூர் ஊராட்சியில் சீமைக் கருவேல மரங்களை அழிப்பது குறித்த கலந்தாய்வுக் கூட்டம் ஊராட்சித் தலைவர் எம்.எஸ். முத்துகுபேரன் தலைமையில் நடைபெற்றது.

கலந்தாய்வு கூட்டத்தில் ம. சக்தி எம்.எல்.ஏ. பங்கேற்று சீமைக் கருவேல மரங்களை அழிக்கும் பணியை தொடங்கிவைத்து பேசுகையில், சீமைக் கருவேல மரங்கள் நிலப்பரப்பில் 20 அடி ஆழத்துக்குள் உள்ள நீரை உறிஞ்சுவதோடு, மேலே வளிமண்டலத்தில் உள்ள ஈரப் பதத்தையும் உறிஞ்சிவிடும். இதனால் பருவ மழைபொழிவு பாதிக்கப்பட்டு நீர் ஆதாரம் படிபடியாக குறைந்துவிடும்.

இதனால் மாநிலம் முழுவதும் சீமைக் கருவேல மரங்களை முற்றிலுமாக அழிக்க அரசு திட்டமிட்டு செயல்பட்டு வருகிறது. நாகை மாவட்டத்தில் முதன்மையாக எருக்கூர் ஊராட்சியில் வரும் அக்டோபர் 2ஆம் தேதிக்குள் சீமைக் கருவேல மரங்கள் முற்றிலும் அழிக்கப்படும் என்றார்.

## நெல்லையில் ஆப்பிள் விலை சரிவு

சிம்லாவில் இருந்து திருநெல்வேலிக்கு ஆப்பிள் பழங்களின் வரத்து அதிகரித்துள்ளதால் விலை சரிந்துள்ளது.

இந்தியாவில் ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் ஆப்பிள் பழங்களின் அறுவடை மிகவும் குறைவு. அதனால் ஆஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் இருந்து அதிகளவில் ஆப்பிள் இறக்குமதி செய்யப்பட்டது. இவை விலை சற்று அதிகம். வாஷிங்டன் ஆப்பிள் கிலோ ரூ.150 முதல் ரூ.180 வரையும், பச்சை நிற ஆப்பிள் கிலோ ரூ.190 முதல் ரூ.210 வரையும் விற்பனையாகின.

இந்தநிலையில் செப்டம்பர் முதல் வாரத்தில் இருந்து இந்தியாவின் சிம்லா, காஷ்மீர் மாநிலங்களில் ஆப்பிள் அறுவடை அதிகரித்துள்ளது.

திருநெல்வேலிக்கு சிம்லா ஆப்பிள் அதிகளவில் வரத்து உள்ளது. இவை சாலையோர கடைகளில் கிலோ ரூ.50 முதல் ரூ.90 வரை விற்பனையாகின்றன.

அதேநேரத்தில் பல்லாரியின் விலை தொடர்ந்து உச்சத்திலேயே உள்ளது. மேலப்பாளையத்தில் உள்ள உழவர் சந்தையில் காய்கனிகளின் ஞாயிற்றுக்கிழமை விலை நிலவரம் (ஒரு கிலோவுக்கு):

கத்தரிக்காய்-ரூ.24, வெண்டைக்காய்-12, தக்காளி-13, அவரைக்காய்-36, கொத்தவரை-10, புடலங்காய்-8, பாகற்காய்-12, பீர்க்கங்காய்-12, சுரைக்காய்-6, தடியங்காய்-10, பூசணிக்காய்-10, மாங்காய்-66, மிளகாய்-20, முள்ளங்கி-18, இஞ்சி-100, உருளைக்கிழங்கு-18, கேரட்-44, பீட்ரூட்-14, முட்டைகோஸ்-16, சவ்சவ்-16, பீன்ஸ்-44, பூண்டு 60, முருங்கைக்காய்-20, தேங்காய்-28, வெள்ளரிக்காய்-8, சேனைக்கிழங்கு-30, சேம்பு-20, பல்லாரி-54, சின்னவெங்காயம் 36.

**பாபநாசம், சேர்வலாறு அணைகளின் நீர்மட்டம் உயர்வு**

மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்ப்பிடிப்புப் பகுதியில் பெய்து வரும் மழையால் பாபநாசம், சேர்வலாறு அணைகளின் நீர்மட்டம் மேலும் உயர்ந்துள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் அணைகளின் நீர்ப்பிடிப்புப் பகுதியில் சில தினங்களாக மிதமான மழை நீடித்து வருகிறது. இதனால் நீர்வரத்து அதிகரித்து அணைகளின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது.

மழையளவு: ஞாயிற்றுக்கிழமை காலை நிலவரப்படி பாபநாசம் அணை 5 மி.மீ., குண்டாறு அணை 8, அடவிநயினார் அணை 3, பேச்சிப்பாறை அணை 18.4, பெருஞ்சாணி அணையில் 4.2 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 1260.86 கனஅடியும், மணிமுத்தாறு அணைக்கு விநாடிக்கு 82 கனஅடியும், கடனாநதி அணைக்கு விநாடிக்கு 60 கனஅடியும், ராமநதி அணைக்கு விநாடிக்கு 20 கனஅடியும், அடவிநயினார் அணைக்கு விநாடிக்கு 28 கனஅடியும் நீர்வரத்து இருந்தது.

அணை திறப்பு: பாபநாசம் அணையிலிருந்து விநாடிக்கு 700 கனஅடியும், மணிமுத்தாறு அணையிலிருந்து 100 கனஅடியும், கடனாநதி அணையில்

60 கனஅடியும், ராமநதி அணையில் 20 கனஅடியும், அடவிநயினார் அணையில் 25 கனஅடியும், கொடுமுடியாறு அணையில் 30 கனஅடியும் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. பாபநாசம் அணையின் நீர்மட்டம் 1 அடி உயர்ந்து 58.05 அடியாகவும், சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 1.51 அடி உயர்ந்து 71.72 அடியாகவும், மணிமுத்தாறு அணை நீர்மட்டம் 56.30 அடியாகவும், கடனாநதி அணையின் நீர்மட்டம் 32.50 அடியாகவும், ராமநதி அணையின் நீர்மட்டம் 37 அடியாகவும், கருப்பாநதி அணையின் நீர்மட்டம் 53.42 அடியாகவும், அடவிநயினார் அணையின் நீர்மட்டம் 56.50 அடியாகவும், வடக்குப் பச்சையாறு அணையின் நீர்மட்டம் 23.75 அடியாகவும், கொடுமுடியாறு அணையின் நீர்மட்டம் 13.25 அடியாகவும் இருந்தது.

**இயற்கை மூலிகைகள், தொடு வர்ம சிகிச்சை முகாம்**

முளகுமூடு மறை வட்டார நலவாழ்வு பணிக்குழு சார்பில் பாரம்பரிய மிக்க இயற்கை மூலிகைகள் மற்றும் தொடு வர்ம சிகிச்சை முகாம் தக்கலையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. வட்டாரத் தலைவர் சமூக சேவகர் ம.சூசைமரியான் தலைமை வகித்தார். மறை மாவட்டச் செயலர் இயேசுதாசன் முன்னிலை வகித்தார். நலவாழ்வு பணிக்குழு இயக்குநர் வ.ஆன்ட்ரூஸ் முகாமை தொடங்கிவைத்தார். செயலர் மேரி விஜயநிர்மலா, பொருளாளர் மெற்றில் சாந்தி ஆகியோர் அறிக்கை வாசித்தனர். இயற்கை மூலிகை மருத்துவ நிபுணர்கள் வீரமுத்து, டார்வின் ஆகியோர் உணவு, இயற்கை, காற்று மாசுபடுவதால் உண்டாகும் மாரடைப்பு, பக்கவாதம், நீரிழிவுநோய், புற்றுநோய், ஞாபக மறதி, சிறுநீரக நோய் தாக்குதலும், தடுப்பு முறைகளும் பற்றி செய்முறை விளக்கத்துடன் பேசினர். முகாமில் உடல் முழு பரிசோதனை செய்யப்பட்டு ஆலோசனை வழங்கப்பட்டன.

**மண்புழு உரம் தயாரிப்பு பயிற்சி**

கோவில்பட்டி அருகேயுள்ள மேலஈரால் கிராமத்தில் விவசாயிகளுக்கு மண் புழு உரம் தயாரித்தல் பயிற்சியும், மானாவாரியில் ஒருங்கிணைந்த பண்ணையம் அமைத்தல் குறித்த விளக்கமும் அளிக்கப்பட்டது.

கிள்ளிகுளம் வேளாண் கல்லூரி மாணவர்கள் இம்முகாமில் பங்கேற்று விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர்.

மண் புழு உரம் தயாரிக்க 3 அடி அகலம், 6 அடி நீளம், 2 அடி உயரமுடைய உரத்தொட்டி அமைத்து அதில் சிறுசிறு கற்கள், விவசாயக் கழிவுகள், காய்கனி கழிவுகள், மாட்டுச் சாணம், தேவைக்கேற்ப மண் புழு ஆகியவற்றை படுக்கைவசமாக நிரப்ப வேண்டும்.

ஒவ்வொரு அடுக்குக்குப் பிறகும் சாண கரைசலை தெளித்த பின், 45 - 60 நாள்களில் 10 -15 கிலோ அளவுள்ள மண் புழு உரம் பெறலாம்.

ஒருங்கிணைந்த பண்ணையத்தில், மானாவாரி நிலத்திற்கு ஏற்ப கால்நடை வளர்ப்பு, பயிர் வளர்ப்பு, மீன் வளர்ப்பு, உயிர் எரிவாயு, வேளாண் காடுகள் அமைத்தலின் முக்கியத்துவம், இத்திட்டத்துக்கான அரசு மானியம் குறித்தும் எடுத்துரைத்து துண்டுப் பிரசுரங்களையும் வழங்கினர்.

முகாமுக்கு கோவில்பட்டி வேளாண் உதவி இயக்குநர் சாந்தி ராணி தலைமை வகித்தார். வேளாண் அலுவலர் ஹரிபுத்திரன் முன்னிலை வகித்தார்.

விவசாயிகளின் கேள்விகளுக்கு அதிகாரிகள் பதிலளித்ததுடன், அந்தந்தப் பகுதியிலுள்ள வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகுமாறும் கேட்டுக் கொண்டனர்.

**கால்நடை மருத்துவ முகாம்**

திண்டிவனத்தை அடுத்த விட்டலாபுரத்தில் இலவச கால்நடை மருத்துவ முகாம் சனிக்கிழமை நடைபெற்றது.

தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறையுடன், திண்டிவனம் சர்வீஸ் அரிமா சங்கம் இணைந்து இம் முகாமை எண்டியூரில் நடத்தியது.

முகாமிற்கு சங்கத் தலைவர் முத்துராஜ்குமார் தலைமை வகித்தார். கால்நடை உதவி மருத்துவர்கள் செங்கூட்டுவன், கஸ்தூரிரங்கன் தலைமையிலான மருத்துவக் குழுவினர் 350-க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட்டனர்.

நிகழ்ச்சியில் சங்கச் செயலர் ஆனந்தகுமார், பொருளாளர் நூருல்லா, வட்டாரத் தலைவர் ஸ்மைல் ஆனந்த், நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## முட்டை நுகர்வை அதிகரிக்க வேண்டும்

இந்தியர்கள் முட்டை நுகர்வை அதிகரிக்க வேண்டும் என மத்திய அரசு கோழியின ஆராய்ச்சி மைய இயக்குநர் கூறினார்.

தானே புயலால் பாதிக்கப்பட்ட தியாகவல்லி கிராமப் பெண்களுக்கு நாட்டுக்கோழி வழங்குதல் மற்றும் நாட்டுக்கோழி வளர்ப்புப் பயிலரங்கம் கடலூரில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

சௌபாக்கியா அறக்கட்டளை மற்றும் முத்து நாட்டுக்கோழி பண்ணை சார்பில் நடந்த இந்நிகழ்விற்கு பண்ணை உரிமையாளர் ராம.காத்தமுத்து தலைமை வகித்தார்.

சண்டிகரில் உள்ள மத்திய அரசு கோழியின ஆராய்ச்சி மையத்தின் இயக்குநர் ரவிக்குமார் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்று பேசுகையில், நாட்டுக்கோழி வளர்ப்பு குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு தேவை. ஒரு குடும்பத்தில் குறைந்தபட்சம் 20 கோழி வளர்க்கும் போது அதிலிருந்து கிடைக்கும் முட்டை, இறைச்சி ஆகியவை அக்குடும்பத்தினருக்குத் தேவையான புரதச்சத்தை அளிப்பதோடு அவர்களுது குடும்ப வருமானத்தையும் ஓரளவிற்கு பூர்த்தி செய்யும். அதற்கான செலவு மிக, மிகக் குறைவு.

இந்தியாவில் ஏழ்மை அதிகமாக உள்ளது. அதனைப் போக்க ஆடு, மாடு, கோழி வளர்ப்பை ஊக்கப்படுத்த வேண்டும்.

இந்தியாவில் ஒருவர் ஆண்டுக்கு 180 முட்டை சாப்பிட வேண்டுமென புள்ளி விவரங்கள் தெரிவித்த போதிலும் 56 முட்டைகளே

சாப்பிடுகிறார்கள். அதே நேரத்தில் சீனாக்காரர்கள் 320 முட்டைகளும், ஜெர்மானியர்கள் 330 முட்டைகளும் சாப்பிடுகிறார்கள்.

முட்டை உற்பத்தியில் உலகில் 5-வது இடத்தை வகித்த போதிலும் அனைவருக்கும் தேவையான முட்டை கிடைப்பதில்லை. ஆண்டுக்கு 9 கிலோ கோழிக்கறி சாப்பிட வேண்டுமென்ற நிலையில் 3.6கிலோ கறி மட்டுமே சாப்பிடுகிறார்கள். இதனை சரி செய்ய அனைத்து வகையான கோழி வளர்ப்பினையும் ஊக்கப்படுத்த வேண்டும்.

இதில் நாட்டுக்கோழியினங்களை வளர்ப்பது செலவு குறைவதோடு, நோய் தாக்குதலும் குறைவாகவே இருப்பதால் அதனை கிராமங்களில் ஊக்கப்படுத்த வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில் 30 பெண்களுக்கு 100 கோழிகள் வழங்கப்பட்டன. விலங்கு நல ஆர்வலர் பூனம்சந்த், கே.ஆறுமுகம், எஸ்.ராமசாமி, எஸ்.மணிகண்டன் ஆகியோர்தி பேசினர்.

## பண்ருட்டியில் பலத்த மழை

பண்ருட்டியில் ஞாயிற்றுக்கிழமை இரவு சிறிது நேரம் பெய்த பலத்த மழையால் பேருந்து நிலையம், கடை வீதிகளில் மழைநீர் தேங்கியது. வெப்ப தாக்கத்தால் தவித்த மக்களுக்கு இந்த மழை மகிழ்ச்சியை அளித்துள்ளது.

கடலூர் மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக வெயிலின் தாக்கம் அதிகம் இருந்தது. இதனால், பகல் நேர வெப்பமும் அதிகரித்து வந்தது. இரவு நேரத்தில் வெப்பத்தின் தாக்கத்தால் தூக்கமின்றி பெரியவர்கள், குழந்தைகள் அவதி அடைந்து வந்தனர்.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை திடீரென பெய்த பலத்த மழையால் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான இடங்களில் தண்ணீர் தேங்கியது.

பேருந்து நிலையம், கடைவீதி, நான்கு முனைச் சந்திப்பு உள்ளிட்ட முக்கிய சாலைகளில் மழைநீர் மூன்று அடி வரை தேங்கி நின்றது. கழிவுநீருடன் தேங்கி நின்ற மழை நீரில் பொதுமக்கள் நடந்து சென்றனர். இப்பகுதியில் உள்ள கழிவுநீர் கால்வாய்கள் தூர்வாரி சீரமைக்கப்படாததால் பண்ருட்டி நான்கு முனைச் சந்திப்பு, கடலூர்-சித்தூர் சாலை, சென்னை-கும்பகோணம் சாலை, பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் மழைநீர் கழிவு நீருடன் தேங்கி நின்றது.

வாகனங்கள் தேங்கிய மழைநீரில் மிதந்தபடி சென்றன. அம்பேத்கர் நகர் தெருக்களிலும் மழை நீர் தேங்கி நின்றது. தொடர்ந்து மழை நீடித்தால் வீட்டினுள் மழைநீர் புகும் அபாயம் உள்ளதாக அப்பகுதியை சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

எனவே, இப்பகுதியில் உள்ள கால்வாய்களை தூர்வாரி சீர்செய்ய வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சி: சித்திரை மாத வெயிலின் தாக்கத்தைப் போல் கடந்த சில வாரங்களாக வெயிலின் தாக்கம் இருந்தது. இதனால் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். தற்போது பெய்துள்ள மழை குளிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாலும், விவசாய பயிர்களுக்கு உயிரூட்டும் மழையாக உள்ளதாலும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**பண்ருட்டியில் பலத்த மழை**

பண்ருட்டியில் ஞாயிற்றுக்கிழமை இரவு சிறிது நேரம் பெய்த பலத்த மழையால் பேருந்து நிலையம், கடை வீதிகளில் மழைநீர் தேங்கியது. வெப்ப தாக்கத்தால் தவித்த மக்களுக்கு இந்த மழை மகிழ்ச்சியை அளித்துள்ளது.

கடலூர் மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக வெயிலின் தாக்கம் அதிகம் இருந்தது. இதனால், பகல் நேர வெப்பமும் அதிகரித்து வந்தது.

இரவு நேரத்தில் வெப்பத்தின் தாக்கத்தால் தூக்கமின்றி பெரியவர்கள், குழந்தைகள் அவதி அடைந்து வந்தனர்.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை திடீரென பெய்த பலத்த மழையால் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான இடங்களில் தண்ணீர் தேங்கியது.

பேருந்து நிலையம், கடைவீதி, நான்கு முனைச் சந்திப்பு உள்ளிட்ட முக்கிய சாலைகளில் மழைநீர் மூன்று அடி வரை தேங்கி நின்றது. கழிவுநீருடன் தேங்கி நின்ற மழை நீரில் பொதுமக்கள் நடந்து சென்றனர்.

இப்பகுதியில் உள்ள கழிவுநீர் கால்வாய்கள் தூர்வாரி சீரமைக்கப்படாததால் பண்ருட்டி நான்கு முனைச் சந்திப்பு, கடலூர்-சித்தூர் சாலை, சென்னை-கும்பகோணம் சாலை, பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் மழைநீர் கழிவு நீருடன் தேங்கி நின்றது.

வாகனங்கள் தேங்கிய மழைநீரில் மிதந்தபடி சென்றன. அம்பேத்கர் நகர் தெருக்களிலும் மழை நீர் தேங்கி நின்றது. தொடர்ந்து மழை நீடித்தால் வீட்டினுள் மழைநீர் புகும் அபாயம் உள்ளதாக அப்பகுதியை சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

எனவே, இப்பகுதியில் உள்ள கால்வாய்களை தூர்வாரி சீர்செய்ய வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சி: சித்திரை மாத வெயிலின் தாக்கத்தைப் போல் கடந்த சில வாரங்களாக வெயிலின் தாக்கம் இருந்தது. இதனால் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். தற்போது பெய்துள்ள மழை குளிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாலும், விவசாய பயிர்களுக்கு உயிரூட்டும் மழையாக உள்ளதாலும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## சத்துக்களை அள்ளித்தரும் முள்ளங்கி



கிழங்கு வகையை சேர்ந்த முள்ளங்கி வெள்ளை, சிவப்பு ஆகிய இரு நிறங்களில் உள்ளன. இதில் மருத்துவ குணங்கள் நிறைந்திருப்பதால் பல நோய்களுக்கு மருந்தாகிறது.முள்ளங்கியில் ஒருவித காரத்தன்மையும், நெடியும் இருக்கும். இது கந்தக சத்தால் உண்டாகிறது. முள்ளங்கியில் இருக்கும் பல வகையான கந்தக மூலக்கூறுகளே அதன் மருத்துவதன்மைக்கு காரணமாகின்றன.

முள்ளங்கி வெப்பத்தன்மையை உள்ளடக்கியது. அதே சமயம் உடலில் உள்ள கழிவுகளை வெளியேற்றி, உடலுக்கு குளிர்ச்சியையும் அளிக்கின்றது.

ஆஸ்துமா, மூச்சிரைப்பு, சைனஸ் பிரச்சினை உள்ளவர்களுக்கு கபம் தோன்றும். அதனை முள்ளங்கி வெளியேற்றும். தொண்டைக்கட்டையும், மூக்கு– தொண்டை பகுதியில் ஏற்படும் தொற்று நோய்களையும் முள்ளங்கி குணப்படுத்தும்.முள்ளங்கி சாறு 30 மில்லியுடன் சிறிது நீர் கலந்து, அரை சிட்டிகை மிளகு தூளும் சேர்த்து பருகினால் கபம்

வெளியேறும். தொண்டை அழற்சியும் நீங்கும்.

முள்ளங்கி கல்லீரலுக்கு சிறந்த நண்பன். இதில் உள்ள கந்தக சத்துக்கள் பித்தநீரை சீராக சுரக்கச் செய்யும். இதனால் கொழுப்பு மற்றும் மாவு சத்துக்கள் நன்றாக ஜீரணமாகும். பித்தப்பையில் கற்களும் தோன்றாது. ரத்தத்தில் கெட்ட கொழுப்புகள் சேருவதும் தடுக்கப்படும். ரத்தத்தில் பிராணவாயுவும் அதிகமாகும்.வயிற்று உப்புசம் ஏற்படும்போது பார்லி கஞ்சியுடன் 30 மிலி முள்ளங்கி சாறு ¼ தேக்கரண்டி இந்துப்பு கலந்து பருகினால் உப்புசம் நீங்கும். ஜீரண தொந்தரவுகள் இருப்பவர்கள் அடிக்கடி உணவில் முள்ளங்கியை சேர்த்துக்கொள்ளவேண்டும்.

முள்ளங்கியில் உள்ள நார்ச்சத்து மலச்சிக்கலை நீக்க உதவுகின்றது. குடலில் தங்கியுள்ள கழிவுகளை வெளியேற்றுகிறது. மூலம், பவுத்திரம் போன்ற நோய்களுக்கும் முள்ளங்கி மருந்தாகும்.

இதில் வைட்டமின்– ஈ சத்து அதிகம் உள்ளதால், நோய் எதிர்ப்பு சக்தி மேம்படும். சிறந்த கிருமி நாசினியாகவும், உடல் வலிகளை நீக்கும் சக்தி கொண்டதாகவும் முள்ளங்கி இருக்கிறது. புற்றுநோய் உள்ளவர்கள் முள்ளங்கியை உணவில் அடிக்கடி சேர்த்துக்கொள்ள வேண்டும்.

முள்ளங்கி, சிறுநீரகத்தில் ஏற்படும் கற்களை கரைக்க உதவுகிறது. தினமும் 50 மிலி முள்ளங்கி சாற்றை சிறிது நீர் கலந்து சாப்பிட்டுவந்தால் சிறு நீரக கற்கள் வெளியேறும். சிறுநீரக தொற்றும் நீங்கும். இதில் உள்ள பொட்டாசியம் சத்து சிறுநீரை அதிகப்படுத்தி வெளியேற்றும். அதனால் உடலில் உள்ள கழிவுகள் நீங்கும். வீக்கம், உடல் வலியும் போகும்.

முள்ளங்கியில் போலிக் அசிட் உள்ளது. எனவே கர்ப்பிணி பெண்கள் இதை உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும். கால் வீக்கம் மற்றும் கர்ப்ப காலத்தில் உண்டாகும் ரத்த அழுத்தம் நீங்கும்.

முள்ளங்கி சர்க்கரை நோயை கட்டுப்படுத்த உதவுகின்றது. அதனால் சர்க்கரை நோய் இருப்பவர்கள் முள்ளங்கியை சாலட் செய்து சாப்பிடலாம். உடல் எடையை குறைக்கவும் இது உதவுகிறது. இது சருமத்தை பொலிவாக்கி, இளமையை பாதுகாக்கவும் செய்யும்.

**<u>சட்னி</u>**

முள்ளங்கி – ¼ கிலோ

காய்ந்த மிளகாய் – 4

கடலை பருப்பு – 1 தேக்கரண்டி

உளுத்தம் பருப்பு – 1 தேக்கரண்டி

கொத்தமல்லி விதை – ½ தேக்கரண்டி

வெந்தயம் – ¼ தேக்கரண்டி

புளி – சிறிய நெல்லிக்காய் அளவு

மஞ்சள் – ¼ தேக்கரண்டி

உப்பு – தேவைக்கு

நல்லெண்ணெய் – 1 தேக்கரண்டி

**தாளிக்க:**

கடுகு – ½ தேக்கரண்டி

பெருங்காயதூள் – ½ தேக்கரண்டி

கறிவேப்பிலை– தேவைக்கு

நல்லெண்ணெய் – 1 தேக்கரண்டி

செய்முறை: முள்ளங்கியை தோல் சீவி துருவிக் கொள்ளுங்கள்.

வாணலியில் எண்ணெய் ஊற்றி புளி, கொத்தமல்லி விதை, வெந்தயம், கடலை பருப்பு, உளுத்தம் பருப்பு, காய்ந்த மிளகாய் போன்றவைகளை சேர்த்து வதக்குங்கள். அத்துடன் முள்ளங்கி, மஞ்சள்தூள் கலந்து கிளறுங்கள். ஆறிய பின்பு உப்பு கலந்து அரைத்து, தாளியுங்கள்.

இந்த சட்னியை இட்லி, தோசை, பொங்கல், சப்பாத்தி போன்றவை களோடு சாப்பிடலாம்.

**<u>தயிர் பச்சடி</u>**

முள்ளங்கி – ¼ கிலோ

சிறிய வெங்காயம் – 100 கிராம் (சிறிதாக நறுக்கவும்)

பச்சை மிளகாய் – 2 (நறுக்கிக் கொள்ளவும்)

கொத்தமல்லி தழை – 1 கைப்பிடி (சிறிதாக நறுக்கியது)

தயிர் – 100 மிலி

உப்பு – தேவைக்கு

**தாளிக்க:**

கடுகு – ½ தேக்கரண்டி

காய்ந்த மிளகாய் – 1

கறிவேப்பிலை – சிறிதளவு

பெருங்காயதூள் – ½ தேக்கரண்டி

**செய்முறை:** முள்ளங்கியை தோல் நீக்கி, துருவுங்கள். சிறிய வெங்காயம், பச்சைமிளகாய், கொத்தமல்லி தழை போன்ற அனைத்தையும் ஒரு பாத்திரத்தில் இட்டு உப்பு, தயிர் கலந்திடுங்கள். பொருட்களை தாளித்துக்கொட்டினால் பச்சடி ரெடி. முள்ளங்கி பச்சடி சப்பாத்தி, சாதத்துக்கு சுவையாக இருக்கும்.

**சாலட்**

முள்ளங்கி – ¼ கிலோ
பாசிப்பருப்பு – 2 தேக்கரண்டி (½ மணிநேரம் நீரில் ஊறவைக்கவும்)
இஞ்சி துருவல் – ½ தேக்கரண்டி
பச்சை மிளகாய் – 2 (சிறிதாக நறுக்கவும்)
கொத்தமல்லி தழை நறுக்கியது – 1 கைப்பிடி அளவு
உப்பு – தேவைக்கு

**செய்முறை**: முள்ளங்கியை தோல் நீக்கி துருவவும். பாசிபருப்பை நீரில் இருந்து வடிகட்டி எடுக்கவும்.

பாத்திரத்தில் துருவிய முள்ளங்கி, பாசிபருப்பு, பச்சை மிளகாய், இஞ்சி, உப்பு, கொத்தமல்லி தழை கலந்து 10 நிமிடம் ஊற வைத்து பின்பு பரிமாறவும்.

இது உடல் எடை குறைப்பிற்கு ஏற்ற உணவு. சர்க்கரை நோயாளிகள் இதை மாலை நேர சிற்றுண்டியாக சாப்பிடலாம்.

**ரொட்டி**

முள்ளங்கி – ¼ கிலோ

கோதுமை மாவு – 200 கிராம்

மிளகாய் தூள் –½ தேக்கரண்டி

கறிமசாலா தூள் – ½ தேக்கரண்டி

மஞ்சள் தூள் –½ தேக்கரண்டி

ஓமம் – ½ தேக்கரண்டி

உப்பு – தேவைக்கு

எண்ணெய் – 2 தேக்கரண்டி

**செய்முறை:**

முள்ளங்கியை தோல் நீக்கி, துருவுங்கள். கோதுமை மாவு மற்றும் மிளகாய்தூள், கறி மசாலாதூள், மஞ்சள் தூள், ஓமம், உப்பு ஆகியவைகளை சேருங்கள். அதில் ஒரு தேக்கரண்டி எண்ணெய் கலந்து சிறிது சிறிதாக நீர் கலந்து கெட்டியாக பிசைந்து பெரிய எலுமிச்சம்பழம் அளவு உருண்டைகளாக பிடியுங்கள். அதில் கோதுமை மாவு தடவி ரொட்டியாக்கி சுட்டு எடுங்கள். தயிர், ஊறுகாய் தொட்டு சாப்பிட்டால் இது அதிக சுவைதரும்.

**ஸ்பெஷல் உருண்டை**

முள்ளங்கி – ¼ கிலோ

பச்சைமிளகாய் – 2 (நறுக்கவும்)

கோதுமை மாவு – 2 தேக்கரண்டி

கடலைமாவு – 100 கிராம்

தயிர் – 100 மிலி

பெருங்காயதூள் – 2 தேக்கரண்டி

உப்பு – தேவைக்கு

நல்லெண்ணெய் – 2 தேக்கரண்டி

**செய்முறை:** முள்ளங்கியை தோல் நீக்கி துருவவும். பாத்திரத்தில் துருவிய முள்ளங்கி, பச்சை மிளகாய், கடலை மாவு, கோதுமை மாவு, ஓமம், உப்பு, தயிர் கலந்து கெட்டியாக பிசைந்து சிறிய உருண்டைகளாக பிடிக்கவும். அவைகளை கையால் லேசாக தட்டி இட்லி பாத்திரத்தில் பத்து நிமிடம் வைத்து பிறகு சுவைக்கவும். இதை குழந்தைகள் விரும்பி சாப்பிடும்.

## ரூ.330 கோடி செலவில் அமைக்கப்படும் கண்ணன்கோட்டை நீர்த்தேக்கத்தில் டிசம்பர் மாதம் முதல் தண்ணீரை சேமிக்க திட்டம் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் தகவல்



ஊத்துக்கோட்டை,

ரூ.330 கோடி செலவில் அமைக்கப்படும் கண்ணன்கோட்டை நீர்த்தேக்கத்தில் டிசம்பர் மாதம் தண்ணீரை சேமிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் மாதவன் தெரிவித்துள்ளார்.

நீர்த்தேக்கம்

சென்னை நகர மக்களின் குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு முதல்-அமைச்சர் ஜெயலலிதா ஊத்துக்கோட்டை அருகே உள்ள தேர்வாய்கண்டிகை மற்றும் கண்ணன்கோட்டையில் உள்ள ஏரிகளை ஒன்றிணைத்து ரூ.330 கோடி செலவில் நீர்த்தேக்கம் அமைக்கப்படும் என்று அறிவித்திருந்தார். கண்ணன்கோட்டை. தேர்வாய் கண்டிகை

ஏரிகளுக்கு ஆந்திர மாநிலம் சத்தியவேடு காட்டுப்பகுதிகளில் உள்ள மதனம்பேடு, பாலகிருஷ்ணாபுரம், மதனஞ்சேரி, ராஜகுண்டா ஆகிய சிறு கால்வாய்கள் மூலம் ஆண்டுக்கு 0.3 டி.எம்.சி. மழை நீர் வந்து சேருகிறது. இந்த 2 ஏரிகளில் 41 மில்லியன் கனஅடி நீரை மட்டுமே சேமித்து வைக்க முடியும். மீதமுள்ள தண்ணீர் வங்க கடலில் வீணாக செல்கிறது. இதனை கருத்தில் கொண்டு தமிழக அரசு இங்கு நீர்த்தேக்கம் அமைக்க முடிவு செய்தது.

கிருஷ்ணா நதி நீரை கண்ணன்கோட்டை நீர்த்தேக்கத்துக்கு கொண்டு செல்ல கால்வாய் அமைக்க 1,485 ஏக்கர் நிலம் தேவைப்பட்டது. இதில் 800 ஏக்கர் பட்டா நிலம், 630 ஏக்கர் புறம்போக்கு நிலம், 55 ஏக்கர் வனத்துறைக்கு சொந்தமான நிலம் ஆகும். பட்டா நில உரிமையாளர்களுக்கு ஏக்கர் 1-க்கு ரூ. 13 லட்சம் வீதம் 477 பேருக்கு அரசு பணப்பட்டுவாடா செய்துள்ளது. மீதம் உள்ள 250 பேர் பணம் வாங்க மறுத்ததால் பணம் பொன்னேரி கோர்ட்டில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

1 டி.எம்.சி. தண்ணீர்

இந்த நிலையில் நீர்த்தேக்கம் அமைக்கும் பணிகள் இரவு, பகலாக நடந்து வருகிறது. நீர்த்தேக்கம் மட்டும் 1,100 ஏக்கர் பரப்பரவில் அமைக்கப்படுகிறது. 385 ஏக்கர் நிலப்பரப்பில் கால்வாய் அமைக்கப்பட்டு வருகிறது. இதில் 1 டி.எம்.சி. தண்ணீரை சேமிக்கும் விதத்தில் நீர்த்தேக்கம் அமைக்கப்படுகிறது. அதாவது 1,000 மில்லியன் கனஅடி நீரை சேமித்து வைக்கலாம்.கிருஷ்ணா நதி நீர் பங்கீட்டு திட்டத்தின்படி பூண்டி ஏரிக்கு திறந்து விடப்படும் தண்ணீரை தமிழக எல்லையான ஊத்துக்கோட்டை அருகே உள்ள ஜங்காலபள்ளியில் கால்வாயின் குறுக்கே தடுப்பு அமைத்து கண்ணன்கோட்டை நீர்த்தேக்கத்துக்கு கொண்டு செல்ல உள்ளனர். இந்த நீர் மற்றும் சத்தியவேடு

காட்டுப்பகுதியில் உள்ள சிறுகால்வாய்கள் மூலம் வரும் தண்ணீரை கண்ணன்கோட்டை நீர்த்தேக்கத்தில் சேமித்து வைக்க உள்ளனர். இதற்காக ஜங்காலபள்ளியில் இருந்து கண்ணன்கோட்டை நீர்த்தேக்கம் வரை 8.30 கிலோ மீட்டர் தூரத்துக்கு கால்வாய் அமைக்கும் பணிகள் இரவு பகலாக நடந்து வருகிறது.70 சதவீத பணிகள்கண்ணன்கோட்டை நீர்த்தேக்கத்தில் சேமித்து வைக்கப்படும் தண்ணீரை ராட்சத மோட்டார்கள் மூலம் உறிஞ்சி 13 கிலோ மீட்டர் தூரத்தில் ஊத்துக்கோட்டை நகர எல்லையில் உள்ள அம்பேத்கர் நகர் பகுதியில் கிருஷ்ணா நதி கால்வாயில் விட உள்ளனர். அங்கிருந்து கிருஷ்ணா நதி கால்வாய் மூலம் தண்ணீர் பூண்டி ஏரியை சென்றடைய உள்ளது. பொதுப்பணித்துறை செயற் பொறியாளர் மாதவன் கூறியதாவது:-

நீர்த்தேக்கம் அமைக்கும் பணிகள் 70 சதவிதம் நிறைவடைந்து விட்டது. கண்ணன்கோட்டை நீர்த்தேக்கத்தில் டிசம்பர் மாதம் முதல் தண்ணீரை சேமிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## தமிழ்நாட்டில் காற்றாலைகள் இயங்கும் நேரம் அதிகரிப்பு தினசரி 2500 முதல் 3 ஆயிரம் மெகாவாட் உற்பத்தியாகிறது



கோவை

தமிழ்நாட்டில் காற்றாலைகள் இயங்கும் நேரம் அதிகரிப்பால் தினசரி 2500 முதல் 3 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் உற்பத்தியாகிறது.

தென்மேற்கு பருவக்காற்றுதமிழ்நாடு முழுவதும் நெல்லை, கன்னியாகுமரி, தூத்துக்குடி, தேனி, திண்டுக்கல், ஈரோடு, திருப்பூர், கோவை மாவட்டங்களில் சுமார் 11 ஆயிரத்து 200 காற்றாலைகள் உள்ளன. இந்த காற்றாலைகள் மூலம் ஒவ்வொரு ஆண்டும் தென்மேற்கு பருவக்காற்று காலமான மே மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை தடையில்லாமல் மின் உற்பத்தி செய்யப்படுகிறது.

மீதமுள்ள காலங்களில் வடகிழக்கு பருவக்காற்று வீசும். அது வலுவில்லாமல் வீசுவதால் போதிய அளவில் மின் உற்பத்தி செய்ய முடியாது. எனவே காற்றாலை மின்உற்பத்திக்கு தென்மேற்கு பருவக்காற்றுதான் உறுதுணையாக இருக்கிறது.

எதிர்பார்ப்பு

ஆனால் நடப்பாண்டில் கடந்த மே மாதம் தொடங்க வேண்டிய தென்மேற்கு பருவக்காற்று சீசன் ஜூன் மாதம் முதல் தொடங்கியது. ஒரு மாதம் தாமதமாக சீசன் தொடங்கியதால், நவம்பர் வரை தென்மேற்கு பருவக்காற்று சீசன் நீடிக்கும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள மொத்த காற்றாலைகளும் இயங்கினால் 7,200 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் திறன் உள்ளது. ஆனால் கடந்த காலங்களில் இந்த முழு அளவிலான மின்சாரத்தையும் மின்வாரியம் எடுக்க முடியாத நிலை இருந்து வந்தது.

ஒரு நாளைக்கு 12 மணிநேரம் மட்டுமே இயங்க அனுமதிக்கப்பட்டது. இதனால் காற்றடிக்கும் காலத்தில் மின் உற்பத்தி செய்ய முடிவதில்லை என்ற குற்றச்சாட்டு இருந்து வந்தது. காற்றாலைகளில் உற்பத்தியாகும் மின்சாரம் வீணாகாமல் முழுவதையும் மின்வாரியம் எடுத்துக்கொள்ள

வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது.

முன்னறிவிப்பு

ஆனால் முன்கூட்டியே எவ்வளவு மின்சாரம் கிடைக்கும் என்று கூறினால் தான், மின்வாரியம் முழுமையாக மின்சாரத்தை பெற முடியும் என்ற நிலை இருந்து வந்தது. இந்த நிலையில் தற்போது, காற்றாலைகள் உரிமையாளர்கள் ஒன்றிணைந்து, தேசிய காற்றாலை மின் நிறுவன உதவியுடன், புதிய தொழில் நுட்பம் மூலம், தினசரி கணக்கீடு செய்யப்பட்டு, அடுத்த 5 நாட்களுக்கு காற்றாலைகளில் இருந்து உற்பத்தியாகும் மின்உற்பத்தி எவ்வளவு? எப்போது கிடைக்கும் என்று முன்னறிவிப்பு செய்யப்படுகிறது. இந்த முன்னறிவிப்பு மின்வாரியத்துக்கு உதவிகரமாக உள்ளது. இது குறித்து காற்றாலை உற்பத்தியாளர்கள் சிலர் கூறியதாவது:-இயங்கும் நேரம் அதிகரிப்பு

மின்வாரியத்துக்கு தேவைக்கான மின்சாரத்தை வாங்கி பயன்படுத்தும் வழிமுறை, முன்னறிவிப்பு தொழில் நுட்பம் மூலம் கிடைக்கிறது. இதனால் தமிழ்நாட்டில் உள்ள 11 ஆயிரம் காற்றாலைகளில் பெரும்பாலான காற்றாலைகள் இயங்கும் நேரம் அதிகரித்து தடையில்லாத உற்பத்தி கிடைக்கிறது. தினசரி 2 ஆயிரத்து 500 மெகாவாட் முதல் 3 ஆயிரம் மெகாவாட் வரை மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. காற்றாலைகளில் இருந்து வாங்கப்படும் மின்சாரத்துக்கு சராசரியாக யூனிட் ரூ.3.51 பைசா வரை மின்வாரியம் வழங்குகிறது. இதனை அதிகரித்து வழங்க வேண்டும் என்ற கோரிக்கை அரசிடம் வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## கொட்டியது மழை; குளிர்ந்தது புதுவை



புதுச்சேரியில் நேற்று இரவு திடீரென கனமழை பெய்தது. இதனால் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது.இரவு முழுவதும் இதமான குளிர்ந்த காற்று வீசியது. இதனால் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

<u>வெயில் தாக்கம்</u>

புதுச்சேரியில் கடந்த சில தினங்களாக வெயில் மக்களை வாட்டி வதைத்து வருகிறது. இதனால் பகல் வேளையில் கடற்கரை, பாரதி பூங்கா, தாவரவியல் பூங்கா உள்ளிட்ட பொழுதுபோக்கு இடங்களில் மக்கள் நடமாட்டம் குறைந்து காணப்பட்டது. வெயில் கொடுமையால் மக்கள் மிகவும் அவதிப்பட்டனர்.

வெயில் தாக்கம் குறைந்தவுடன் காற்று வாங்குவதற்காக கடற்கரை, பூங்கா உள்ளிட்ட இடங்களில் மக்கள் கூட்டம் அலைமோதியதை பார்க்க முடிந்தது. இருப்பினும் அவ்வப்போது புதுச்சேரியில் லேசான சாரல் மழை பெய்தது.

<u>கனமழை</u>

அதேபோல் நேற்று காலையில் வெயில் தாக்கம் அதிகமாக இருந்தது. பின்னர் மாலை வானில் கருமேகங்கள் சூழ்ந்து மப்பும் மந்தாரமுமாக காட்சி அளித்தது. இரவு 9 மணிக்கு மேல் கனமழை கொட்டி தீர்த்தது. இதனால் புதுச்சேரி நகர் பகுதியில் ஆங்காங்கே முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மின்சாரம் தடை செய்யப்பட்டது. இதனால் புதுவையில் பல்வேறு பகுதிகள் இருளில் மூழ்கியது.

இந்த மழை சுமார் 2 மணி நேரத்திற்கு மேலாக மழை நீடித்தது. இதனால் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. புதுச்சேரி பஸ் நிலையம், ரெயின்போ நகர், பெரியார் நகர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் மழைநீர் தேங்கி குளம்போல காட்சி அளித்தது.சுமார் 2 மணி நேரம் கொட்டி தீர்த்த மழையால் புதுவை குளிர்ந்தது.இரவு முழுவதும் இதமான குளிர்ந்த காற்று வீசியது. இதனால் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## நிலக்கோட்டை மார்க்கெட்டில் சம்பங்கி பூக்களின் விலை 10 மடங்கு குறைந்தது



நிலக்கோட்டை,

நிலக்கோட்டை மார்க்கெட்டில் சம்பங்கி பூக்களின் விலை 10 மடங்கு வரை குறைந்துள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

<u>விநாயகர் சதுர்த்தி</u>

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை மற்றும் அந்த பகுதியில் உள்ள மிளகாய்பட்டி, என்.ஆண்டிப்பட்டி, தோப்புப்பட்டி, குளத்துபட்டி, சித்தர்கள்நத்தம், குண்டலப்பட்டி, கோவில்பட்டி, கல்லூத்து, பெருமாள்பட்டி உள்பட சில பகுதிகளில் மல்லிகை, கனகாம்பரம், முல்லை, அரளி, கோழிக்கொண்டை ஆகியவை மட்டுமின்றி பல்வேறு வகையான பூக்களை விவசாயிகள் பயிர் செய்து வருகின்றனர்.

அவர்கள் தங்கள் பூக்களை நிலக்கோட்டை பூமார்க்கெட்டுக்கு கொண்டு வந்து விற்பனை செய்வது வழக்கம். கடந்த சில நாட்களாக விநாயகர் சதுர்த்தி விழாவினை முன்னிட்டு பல்வேறு பகுதிகளிலும் சிலைகள் அமைத்து வழிபாடு நடத்தப்பட்டது. அத்துடன் புரட்டாசி மாதம் முதல் சனிக்கிழமையும் வந்த நிலையில் அனைத்து பகுதிகளிலும் உள்ள பெருமாள் கோவில்களில் சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டன.

ரூ.300 வரை விற்பனை

இதனால் இந்த மார்க்கெட்டில் பூக்கள் அதிக அளவில் விற்பனை ஆனது. அத்துடன் தேவை மேலும் அதிகரித்த நிலையில் விலையும் சற்று உயர்வாகவே இருந்தது. இதன்படி நேற்று முன்தினம் வரை ஒரு கிலோ சம்பங்கி ரூ.300 வரை விற்பனை செய்யப்பட்டது. இதன் காரணமாக விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

ஆனால் இந்தநிலை நேற்று தலைகீழாக மாறியது. அதன்படி சம்பங்கியின் விலை 10 மடங்கு குறைந்து ஒரு கிலோ ரூ.30–க்கு மட்டுமே விற்பனையானது. இதனால் அதனை பயிரிட்டுள்ள விவசாயிகள் பெரும் கவலை அடைந்துள்ளனர். பூக்களை பறிக்கும் தொழிலாளர்களுக்கு கொடுக்கும் கூலித்தொகை கூட அவற்றை விற்பனை செய்தால் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் கூறினர்.

தொழிற்சாலைஇதுகுறித்து விவசாயிகள் சிலர் கூறியதாவது:–

மழை இல்லாத நிலையிலும் எங்களில் பலரும் ஆழ்குழாய் கிணறுகள் மூலம் பூக்களை சாகுபடி செய்து வருகிறோம். ஆனால் இதுபோல குறைவான விலை கிடைத்தால் நாங்கள் பூக்கள் சாகுபடி செய்வதையே கைவிடும் நிலை ஏற்படும் என்பதுதான் உண்மை. எனவே எங்களின் பல்லாண்டு கால கோரிக்கையை ஏற்று இந்த பகுதியில் பூக்களில் இருந்து நறுமண திரவியங்கள் தயாரிக்கும் தொழிற்சாலையை அரசு அமைக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.இதற்கிடையே நேற்று நிலக்கோட்டை பூமார்க்கெட்டில் சம்பங்கி மட்டுமின்றி அனைத்து பூக்களின் விலையும் குறைவாகவே இருந்தது. அதன்படி மல்லிகை, பிச்சி,

முல்லை ஆகியவை ஒரு கிலோ ரூ.100 வரை மட்டுமே விற்பனை செய்யப்பட்டது.

## பாலமேடு பகுதியில் கடும் வறட்சி: கடலை செடிகள் பாதிப்பு விவசாயிகள் கவலை



பாலமேடு பகுதியில் கடும் வறட்சி ஏற்பட்டு கடலை செடிகள் உள்ளிட்ட பயிர்கள் வாடி வதங்கி கிடப்பதை பார்த்து விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

கடும் வறட்சி

மதுரை மாவட்டம், பாலமேடு பகுதியில் சேந்தமங்கலம், பொந்துகம்பட்டி, வெள்ளையம்பட்டி, முடுவார்பட்டி, வலையப்பட்டி, மறவபட்டி, புதூர் லக்கம்பட்டி உள்ளிட்ட சுமார் 30-க்கும் மேற்பட்ட கிராம பகுதிகளில் மானாவாரியாக கடந்த ஆடிமாதம் நிலக்கடலை, கம்பு, சோளம், மொச்சை மற்றும் பயறு வகை தானியங்கள் விதைப்பு செய்யப்பட்டன.

அப்போது பெய்த மழை ஈரத்தினால் பயிர்கள் வளர்ந்தன. இந்தநிலையில் தென்மேற்கு பருவமழை பெய்யாமல் போய்விட்டது. இதனால் கடும் வறட்சி ஏற்பட்டு வெயிலின் தாக்கம் அதிகரித்தது. இதையொட்டி சுமார்

ஆயிரத்திற்கு மேற்பட்ட ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்ட நிலக்கடலை உள்ளிட்ட அனைத்து பயிர்களும் வாடிவதங்கி காணப்படுகின்றன. விவசாயிகள் கவலை

இதுகுறித்து பாலமேட்டை சேர்ந்த விவசாயி நாராயணன் (வயது50) என்பவர் கூறியதாவது:- பாலமேடு பகுதியில் கடும் வறட்சியால் விவசாய பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் விவசாயிகளுக்கு பல லட்சம் ரூபாய் வரை இழப்பு ஏற்படும் அபாயம் உள்ளது, ஒரு கிலோ விதை நிலக்கடலைப் பருப்பு ரூ.115க்கு வாங்கி விதைப்பு செய்தோம். இப்படி மழையில்லாமல் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இப்போது நிலவி வரும் வறட்சியின் காரணத்தினால் கிணறுகளில் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்துள்ளது, இதுதவிர தோட்டப்பயிர்களும் வாடிப்போய் கிடக் கின்றன. மழை பெய்யாவிட்டால் பயிர்களை காப்பாற்ற முடியாமல் கடுமையான நஷ்டத்தினை விவசாயிகள் சந்திக்க நேரிடும். இவ்வாறு அவர் கவலையுடன் தெரிவித்தார்.

## தொடர் தண்ணீர் திறப்பு எதிரொலி: வைகை அணை நீர்மட்டம் 40 அடியாக குறைந்தது



ஆண்டிப்பட்டி,

வைகை அணையில் இருந்து தொடர்ந்து தண்ணீர் திறந்ததால் அணையின் நீர்மட்டம் 40 அடியாக குறைந்தது. வடகிழக்கு பருவமழை கைகொடுக்குமா? என்று பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்.

வைகை அணை

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி அருகே உள்ள வைகை அணை மதுரை மாநகர மக்களின் முக்கிய குடிநீர் ஆதாரமாக விளங்குகிறது. இதுதவிர தேனி, மதுரை, திண்டுக்கல், சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்ட விவசாயத்திற்கும் நீர்ஆதாரமாகவும் உள்ளது. 71 அடி உயரம் நீர்கொள்ளவு கொண்ட வைகை அணை கடந்த 5 ஆண்டுகளாக முழுக்கொள்ளவை எட்டவில்லை.

போதுமான மழை பெய்யாத காரணத்தால் வைகை அணை நீர்மட்டம் அதிகபட்சமாக 60 அடி வரை மட்டுமே உயர்ந்தது. மேலும் கோடை காலங்களில் 25 அடிவரையில் நீர்மட்டம் சரிந்தும் காணப்பட்டு வருகிறது. இதன் காரணமாக வைகை அணையில் இருக்கும் தண்ணீர் குடிநீர் தேவைக்கே போதுமானதாக உள்ளது.

நீர்மட்டம் குறைந்தது

இந்த நிலையில் கேரளாவில் கடந்த ஜூன் மாதம் தென்மேற்கு பருவமழை தொடங்கியது. இதையடுத்து, முல்லைப்பெரியாறு அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டது. இதன்மூலம் வைகை அணை நீர்மட்டம் கடந்த 2 மாதங்களுக்கு முன்பு 53 அடியை எட்டியது. இதனையடுத்து வைகை அணையில் இருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறக்கப்பட்டது.

இதற்கிடையே தென்மேற்கு பருவமழை வழக்கத்தை விட குறைவாக பெய்ததால், அணைகளுக்கு நீர்வரத்து அடியோடு குறைந்தது. தொடர்ந்து அணைகளில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டதால் அணை நீர்மட்டம் கிடுகிடுவென சரிந்தது. அணை நீர்மட்டம் குறைந்ததால், வைகை பாசனப்பகுதிகளில் முறைப்பாசன முறை அமல்படுத்தப்பட்டுள்ளது. தொடர் தண்ணீர் திறப்பால் வைகை அணை நீர்மட்டம் தற்போது 41 அடிக்கும் கீழே சரிந்தது. தென்மேற்கு பருவமழை ஏமாற்றியதால், அடுத்த மாதம் தொடங்கும் வடகிழக்குபருவமழை இந்த ஆண்டாவது வழக்கமான

அளவு பெய்யுமா? என்ற எதிர்பார்ப்பு பொதுமக்களிடையே அதிகரித்துள்ளது.

நேற்று காலை 6 மணியளவில் வைகை அணை நீர்மட்டம் 40.75 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 349 கனஅடி தண்ணீர் வந்த நிலையில், அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக மட்டும் வினாடிக்கு 60 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது. அணையின் மொத்த நீர்இருப்பு 1008 மில்லியன் கனஅடியாக காணப்பட்டது.

தினகரன்

**வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி துவரம் பருப்பு மூட்டைக்கு 1000 சரிவு**



சேலம்: வெளிநாடுகளில் இருந்து துவரம் பருப்பு இறக்குமதி செய்யப்படுவதால், 100 கிலோ எடை கொண்ட துவரம் பருப்பு மூட்டைக்கு ₹ 1000 விலை சரிந்துள்ளது. வட மாநிலங்களில் போதிய மழை இல்லாததால், நடப்பாண்டு வட மாநிலங்களில் தானிய வகைகளில் துவரம், உளுத்தம், பாசிப்பருப்பு உள்ளிட்டவற்றின் விளைச்சல் பாதித்தது. இதன் காரணமாக சேலம் மார்க்கெட்டுக்கு துவரம் பருப்பு, உளுத்தம்பருப்பு, பாசிப்பருப்பு வரத்து குறைந்தது. இவற்றின் விலை கிடுகிடுவென உயர்ந்தது. இந்நிலையில் கடந்த சில நாட்களாக வெளிநாடுகளில் இருந்து துவரம் பருப்பு இறக்குமதி செய்யப்படுவதால், விலை சரிந்து வருகிறது.

இதுகுறித்து சேலம் பருப்பு வியாபாரிகள் கூறியதாவது: கடந்த சில நாட்களாக கென்யா, தான்சான்யா, பர்மா உள்ளிட்ட நாடுகளில் இருந்து துவரம் பருப்பு இறக்குமதி செய்யப்படுகிறது. வட மாநிலங்களில் இருந்தும் ஓரளவிற்கு துவரம் பருப்பு வரத்து உள்ளது. இதன் காரணமாக துவரம் பருப்பின் விலை சரிந்து வருகிறது.

கடந்த வாரம் 13,500 முதல் 14,000 வரை விற்ற 100 கிலோ எடைகொண்ட துவரம் பருப்பு மூட்டை, நேற்று நிலவரப்படி 12,500 முதல் 13,000 ஆயிரம் எனவும்,12,500 முதல் 13,000 விற்ற உளுத்தம்பருப்பு 12,000 முதல் 12,200, அதே நேரத்தில் 9,200 முதல் 9,300க்கு விற்ற பாசிப்பருப்பு 9,600 முதல் 9,700 என விற்கப்படுகிறது. கடலை பருப்பு விலை ஏறாமல் தொடர்ந்து 6,200 முதல் 6,300 என விற்கப்படுகிறது. துவரம் பருப்பு மூட்டைக்கு 1000ம், உளுத்தம் பருப்பு 500 வரையும் விலை குறைந்துள்ளது. இவ்வாறு வியாபாரிகள் கூறினர்.

**வேளாண்.பல்கலையில் மசாலா பொடிகள் தயாரிக்கும் பயிற்சி 29ம் தேதி துவக்கம்**

கோவை, : கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் வெளியிட்ட அறிக்கை: தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் மசாலா பொடிகள் மற்றும் ஊறுகாய் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி வரும் 29 மற்றும் 30ம் ே◌ததிகளில் நடக்கிறது. இதில் மசாலா பொடிகள், பாகற்காய் ஊறுகாய், தயார்நிலை பேஸ்ட், கத்திரிக்காய் ஊறுகாய், காளான் ஊறுகாய், வெங்காய ஊறுகாய், வாழைப்பூ ஊறுகாய் ஆகிய பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. ஆர்வமுள்ளவர்கள் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் உள்ள அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையத்தில் ரூ.1500 செலுத்தி தங்களது பெயரை முன்பதிவு செய்துக்கொள்ளலாம். முன்பதிவு செய்ய வரும் 25ம் தேதி கடைசி நாள். மேலும் விவரங்களுக்கு : 0422-6611340 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு, அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தமிழகத்தில் விலை சரிவால் தேயிலை வர்த்தகம் வீழ்ச்சி**



கோவை: தென்னிந்தியாவில் தேயிலை வர்த்தகம் கடந்த சில ஆண்டுகளாக வீழ்ச்சியடைந்து வருகிறது. தேயிலை விலை வீழ்ச்சிக்கு தரக்குறைபாடு, வர்த்தக வாய்ப்புகள் குறைவு உள்ளிட்ட பல்வேறு காரணங்கள் கூறப்படுகிறது. இது குறித்து கோவை தேயிலை ஏல மைய தலைவர் ராஜேஸ் சந்தர் கூறியதாவது: கோவையில் தேயிலை வர்த்தகம் கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு 19.70 மில்லியன் கிலோவாக இருந்தது.

இது தற்போது 18.37 மில்லியன் கிலோவாக உள்ளது.

விலையை பொறுத்தவரை கோவையில் கடந்த ஆண்டு ஏற்றுமதி ரக தேயிலை கிலோ 76.54க்கும், உள்ளூர் ரக தேயிலைத்தூள் 85.47க்கும் விற்பனை ஆனது. இந்த ஆண்டு ஏற்றுமதி ரகம் 71.82க்கும், உள்ளூர் ரகம் 77.89க்கும் விற்பனையாகியுள்ளது. இதே போல் குன்னூர் விற்பனை மையத்தில் ஏற்றுமதி ரகம் 4.72ம், உள்ளூர் ரகம் 7.58ம் குறைந்துள்ளது. ஒட்டுமொத்தமாக தேயிலை தொழில் வர்த்தகம் தென்னிந்தியாவில் வீழ்ச்சியடைந்து வருகிறது. இதனால் உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள், ஏற்றுமதியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றார்.

தி இந்து
தமிழால் இணைவோம்

## இப்போ நான் விவசாயி: பெரம்பலூர் இளைஞரின் அருந்தானிய அமுதசுரபி



டிப்ளமோ முடித்த கையோடு சென்னை பன்னாட்டு செல்போன் நிறுவனம் ஒன்றில் நிறைவாகச் சம்பாதித்துக் கொண்டிருந்தவர் மாதேஸ்வரன், திடீரென ஒரு நாள் வேலையை உதறிவிட்டுக் கிராமத்துக்குத் திரும்பினார். `இனி பிழைப்புக்குக் கறவை மாடும்

விவசாயமும் போதும்...' என்று மாதேஸ் சொன்னபோது, வழக்கம்போல் 'பிழைக்கத் தெரியாத ஆள்' என்றே எல்லோரும் அவரை நினைத்தார்கள். ஆனால், தனது செயல்பாடுகளால் மூன்றே ஆண்டுகளில் மாவட்டத்தையே திரும்பிப் பார்க்க வைத்தார் மாதேஸ்.

"சென்னையில் வேலை பார்த்தபோது, ஓய்வு நேரத்தில் சக பணியாளர்களுடன் சேர்ந்து சமூகப் பணிகளில் ஈடுபடுவது வழக்கம். அப்போது நடிகர் ஒருவரின் அறக்கட்டளையைச் சேர்ந்த நண்பர் ஒருவர், "மேற்படிப்பு உதவி கோரி பெரம்பலூர் மாவட்டத்திலிருந்து யாருமே எங்கள் அறக்கட்டளைக்கு விண்ணப்பிக்கவில்லை. அந்த அளவுக்கு அறியாமையில் உழல்கிறார்கள். நிஜமாகவே சமூகசேவை செய்ய நினைத்தால் உங்கள் ஊரில் தொடங்கு," என்றார்.

**விவசாய ஈர்ப்பு**

விடுமுறையில் ஊருக்கு வந்தபோது மேலும் சில அவலங்கள் முகத்தில் அறைந்தன. எங்கே, எதில் ஆரம்பிப்பது என்று தெரியவில்லை. பால்யகால நண்பர்களை ஒருங்கிணைத்து 'இனி ஒரு விதி செய்வோம்' என்ற சேவை அமைப்பைத் தொடங்கினோம். நம்மாழ்வாரின் கருத்துகளால் ஈர்க்கப்பட்டு, இயற்கை வழி வேளாண்மையில் இறங்கினேன். பலரும் முகத்துக்கு முன்பாகவே சிரித்தார்கள்.

"உனக்கென்ன மூளை பிசகிவிட்டதா? உருப்படாமல் போகப் போகிறாய். பொண்ணு கொடுக்க மாட்டார்கள்.." என்று வாய்க்கு வந்தபடி திட்டினார்கள். ஆனால் சோர்ந்துபோகும் ஒவ்வொரு முறையும், என்னுடைய இலக்கிலிருந்து விலகாமல் காப்பாற்றியது, உத்வேகம் தந்தது வாசிப்புதான்" - கண்கள் மின்னச் சொல்கிறார் மாதேஸ்வரன்.

**சிறுதானியச் சாகுபடி**

மரம் நடுதல், நெகிழிப்பைகளை அகற்றுதல், சைக்கிள் சார்ந்த விழிப்புணர்வு, மழைநீர் சேகரிப்பு போன்ற சேவைப் பணிகளுடன்,

குடும்ப நிலத்தில் உழவுப் பணியையும் தொடங்கி அடுத்த கட்டத்துக்கு நகர்ந்தார் மாதேஸ்.

பல முன்னோடிகளைச் சந்தித்து ஆலோசனைகள் கேட்டார். பெரம்பலூர் மாவட்டத்தில் பல தலைமுறைகளுக்கு முன்பு கோலோச்சிய சிறுதானியங்களால் சுயசார்புடன் விவசாயம் செழித்திருந்ததை அறிந்து, அவற்றின் பக்கம் திரும்பினார். அப்பகுதியில் வழக்கொழிந்துவந்த மானாவாரி சிறுதானியங்களைப் பயிரிட ஆரம்பித்தார்.

நீர்த்தேவை குறைவு, பொருளாதார ரீதியாகக் கையைக் கடிக்காத இடுபொருள் செலவுடன் இருந்த சிறுதானியங்களை விளைவித்துப் பார்த்த பிறகு, மறந்திருந்த மண்ணின் மக்களுக்கு அவற்றைக் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

**அடுத்த களம்**

இளைஞர்களை ஊக்கப்படுத்தும் பெரம்பலூர் ஆட்சியர் தாரேஸ் அகமது, மாதேஸ்வரனுக்கு அடுத்த களத்தை அமைத்துக் கொடுத்தார். "பெரம்பலூர் புத்தகத் திருவிழாவில் சக்கை உணவுகளை விநியோகிக்கும் உணவகங்களைத் தவிர்த்துவிட்டு, சிறுதானிய உணவு வகைகளைப் பரிமாற முடியுமா?" என்று மாதேஸ்வரனிடம் கேட்டார்.

நண்பர்களின் உதவியுடன் உழைப்பை மூலதனமாக்கிய மாதேஸ்வரன் அருந்தானிய உணவைப் பரிமாறினார். அதன் சிறப்புகள் குறித்துப் புத்தகத் திருவிழாவின் மேடையிலேயே சித்த மருத்துவர் கு.சிவராமன், முனைவர் கு. ஞானசம்பந்தம், ராமநாதபுரம் ஆட்சியர் நந்தகுமார் உள்ளிட்டோர் பாராட்டினார்கள்.

மக்கள் மத்தியிலும் சிறுதானியம் குறித்த விழிப்புணர்வு பரவலானது. மாவட்ட நிர்வாகத்தின் கூடுதல் ஆதரவுடன் பெரம்பலூர் ஆட்சியர், வட்டாட்சியர் அலுவலக வளாகங்களில் அருந்தானிய உணவகங்களை மாதேஸ்வரன் நடத்திவருகிறார். தூதுவளை, முடக்கத்தான் போன்ற மூலிகைகள், கீரைகளின் சூப், ஆவாரம்பூ, செம்பருத்தித் தேநீர்,

முளைகட்டிய பயிர், சிறுதானிய பிஸ்கட் ஆகியவற்றின் ருசிக்கு அடிமையாகி, வாடிக்கையாளர்கள் நாளுக்கு நாள் பெருகிவருகிறார்கள்.

**கூட்டுறவு உயர்வு**

பெரம்பலூரைத் தொடர்ந்து அரியலூர் புத்தகத் திருவிழாவிலும் அருந்தானிய உணவகம் நடத்தும் வாய்ப்பு வந்தது. அங்கிருக்கும் இளைஞர்களைக் கொண்டு, அந்த மாவட்டத்திலும் நிரந்தர அருந்தானிய உணவகங்களைச் செயல்படுத்தும் முனைப்பில் இருக்கிறார் மாதேஸ்வரன்.

'அருந்தானியம்' என்ற பெயரில் ஓர் இணையதளம் ஆரம்பித்து, சிறுதானிய விளைபொருட்களைக் கடல் கடந்து சந்தைப்படுத்தும் முயற்சியைத் தொடங்கியிருக்கிறார்.

"கூட்டுறவுப் பால் பண்ணைகள்போல, சிறுதானிய விவசாயிகளைக் கொண்டு கூட்டுறவு அமைப்பைத் தொடங்கி, விளைபொருளுக்கான விலையை அவர்களிடமே முழுவதுமாகக் கொண்டு சேர்க்கும் ஏற்பாடுகளைச் செய்துவருகிறேன். இதன்மூலம் மரபு சார்ந்த சிறுதானிய விவசாயத்துக்கு நிறைய விவசாயிகள் திரும்புவார்கள். மக்களுக்கும் நஞ்சில்லாத சத்தான உணவு கிடைக்கும்," - மாதேஸ்வரனின் கண்கள் எதிர்காலத்தை நோக்குகின்றன.

**கவனம் ஈர்த்த பணிகள்**

பெரம்பலூர் மாவட்டக் கிராமமான நக்கசேலத்தில் நடந்த ரத்ததான முகாமைக் காணச் செய்தியாளர்கள் சென்றிருந்தனர். செய்தி சேகரிப்பு முடிந்து புறப்பட நினைத்தவர்களிடம், "அண்ணா, உங்களுக்கு ஆட்சேபணை இல்லையென்றால் அரசு மருத்துவமனை ரத்த வங்கிக்கு நீங்களும் ரத்ததானம் செய்யலாமே" என்று நட்புடன் கோரிக்கை வைத்தார் மாதேஸ்வரன்.

செய்தியாளர்களுக்கு அது புதிதாக இருந்தாலும், மறுநிமிடமே உற்சாகமாக உதவ முன்வந்தார்கள். "இன்றைக்கு எங்கே ரத்ததான முகாம் நடந்தாலும், பெரம்பலூர் செய்தியாளர்கள் ஆர்வத்துடன்

பங்கேற்பதே என்னுடைய ஆர்வத்துக்குக் கிடைத்த வெகுமதி" என்று பெருமிதப்படுகிறார் மாதேஸ்வரன்.

சகாக்களுடன் சேர்ந்து ரத்தத் தானம் மட்டுமல்லாமல் மாவட்ட மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளைக் கவனப்படுத்தும் முயற்சிகளிலும் ஈடுபட்டுவருகிறார். கண்ணில்படும் சமூக அவலங்களைக் கேமரா ஃபோனில் படமெடுத்து முகநூல், வாட்ஸ்அப் எனச் சமூக ஊடகங்களில் கேள்விக்கு உட்படுத்துகிறார். குடிநீர்ப் பிரச்சினை, மதுக்கூடங்கள் அகற்றுதல் எனக் களத்தில் இறங்கி அவர் கேள்வி கேட்பது, சமூகத்தில் பல தரப்பினரின் கவனத்தை ஈர்த்துவருகிறது.

## முன்னத்தி ஏர் 1 - சத்தியமங்கலத்தில் ஓர் 'இயற்கை வேளாண் பள்ளி'

இயற்கை வேளாண்மை என்ற கரு, உருக்கொண்ட காலகட்டத்தில் பல உழவர்கள் இதில் முன்னோடிகளாக - முன்னத்தி ஏர்களாகக் களம் இறங்கினர். பிழை திருத்தச் சுழற்சியில் அவர்கள் பல்வேறு இழப்புகளைச் சந்தித்தனர். பொருள் இழப்பு, கால இழப்பு, அண்டை அயலாரின் ஏச்சுப் பேச்சு என்று மிகுந்த அழுத்தங்களுக்கு ஆளாகினர். அது மட்டுமல்லாமல் இவர்களுக்கு அரசு எந்தவித ஆதரவோ, உதவியோ செய்யவில்லை என்பது வருத்தத்துக்கு உரிய செய்தி.



இப்படித் தங்களை இழந்து இயற்கைவழி வேளாண்மையை முன்னனெடுத்தவர்கள் பலர். அவர்களில் ஒருவர்தான், வேளாண் மையில் நீண்ட நெடிய அனுபவமும், அதை மற்றவர்களுக்குக் கற்றுத்தரும் திறனும் கொண்டவருமான சத்தியமங்கலம் சுந்தரராமன்.

**பயிற்சிக் கழகம்**

தமிழகத்தில் மட்டுமல்லாது பல மாநிலங்களிலும் உள்ள இயற்கை வேளாண் உழவர்களுக்கு நன்கு அறிமுகமானர் இவர். இவருடைய பண்ணை பதிவு செய்யப்படாத ஒரு இயற்கைவழி வேளாண் கல்லூரியாகவே திகழ்கிறது. தமிழக உழவர் தொழில்நுட்பக் கழகத்தின் தலைவரான இவர், பல்வேறு இயற்கைவழி வேளாண்மையாளர்களுக்கு வழிகாட்டியாக விளங்கிவருகிறார்.

ஈரோடு மாவட்டம் சத்திய மங்கலத்துக்கு அருகில் உள்ள கோம்புப் பள்ளத்தில் இவருடைய 13 ஏக்கர் பண்ணை உள்ளது. மண்புழு உரப்படுகை, மட்கு உரப்படுகை, வளர்ச்சி ஊக்கிகள் மற்றும் பூச்சி விரட்டிகளுக்கு உரிய ஊறல் கரைசல்கள் என்று உயிர்ம வேளாண்மைக்கு உரிய பல்வேறு உதவிகளுடன் ஒரு விளக்கப் பண்ணையாகவே உள்ளது. நாள்தோறும் பல பார்வையாளர்கள் வந்து செல்கின்றனர். பல்கலைக்கழகத்தில் படித்தவர் முதல் பாமரர்கள்வரை பலருக்கும் இது ஒரு பயிற்சிப் பண்ணையாக உள்ளதை மறுக்க முடியாது.

**கூடுதல் ஊதியம்**

எழுபது வயதைத் தாண்டிவிட்ட இவர் வேதி வேளாண்மையில் மட்டுமே 35 ஆண்டுகள் பட்டறிவு கொண்டவர். ஆனால், கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக இயற்கை வழி வேளாண்மையில் ஈடுபட்டுவருகிறார்.

இடுபொருள் இல்லாத இயற்கை வேளாண்மையை மேற்கொண்டாலும், கட்டுப்படியான விலை கிடைக் காதவரை உழவர் சமூகத்தைக் காப்பாற்ற முடியாது என்பது இவருடைய தீர்மானமான கருத்து. தனது பண்ணையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு மற்றவர்களைவிட, சற்றுக் கூடுதலாகவே ஊதியம் கொடுக்கிறார். தொழிலாளர்களைக்

கண்ணியமாக நடத்துகிறார், மற்றவர்களும் அவ்வாறு நடத்த வேண்டும் என்று வலியுறுத்துகிறார். நிலவுடைமையாளர்களும் உழைப் பாளிகளும் வேளாண்மையில் பிரிக்க முடியாத உறுப்புகள் என்று கூறும் இவர், வீட்டுக்குத் தேவையான காய்கறிகள், நெல்லுடன் வணிகப் பயிர்களான கரும்பு, மக்காச்சோளம், மஞ்சள் போன்றவற்றையும் சாகுபடி செய்கிறார்.

**ஊனமுற்ற நிலம்**

அதேநேரம், பசுமைப் புரட்சியால் ஏற்பட்ட கோளாறுகளைப் பட்டியலிடத் தவறுவதில்லை. 'பசுமைப் புரட்சியில்' ஈடுபட்டு இவர் தன்னுடைய நிலத்தில் கொட்டிய உப்புஉரங்களும், பூச்சிக்கொல்லிகளும் கிணற்று நீரை மிகக் கடுமையாகப் பாதித்து விட்டன. இவருடைய கிணற்று நீர், கடின நீராக மாறியதோடு உவர்ப்புத்தன்மை கொண்டதாகவும் மாறிவிட்டது.

இதனால் இவர் மற்ற இயற்கைவழி வேளாண்மையாளர்களைவிட, மண்ணில் கூடுதலாக மட்கு உரம் சேர்க்க வேண்டிய இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். இதை இவர் மொழியிலேயே கூறுவதானால் "நான் ஊனமுற்றவனாக மாற்றப்பட்டுள்ளேன். இதனுடன்தான் நான் நடந்தாக வேண்டும்' என்று இவர் கூறும்போது, நம் மனது வேதனைப்படுகிறது.

**ஏமாந்துவிட்டோம்**

பூச்சிகளைப் பற்றிய இவருடைய அறிவு விரிவானது. பூச்சிக் கொல்லிகளைப் பற்றிய அறிவோ அதைவிட அகலமானது. "ஏன் பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்தக் கூடாது' என்று டார்வின், லமார் போன்ற அறிஞர்களைக் குறிப்பிட்டு விளக்குகிறார். இவருக்கு இயற்கை வேளாண்மை பற்றிய புரிதல் வருவதற்குத் தூண்டுகோலாக இருந்தவர் சத்தியமங்கலம் நாகராசன் என்னும் மார்க்சிய அறிஞர். அவரை தனது குரு என்று கூறும் சுந்தரராமன் 'பசுமைப் புரட்சியின் தொடக்கக்

காலத்திலேயே, அதை எதிர்த்தவர் எஸ்.என்., அதைப் புரிந்துகொள்ளாமல் நாம் ஏமாந்துவிட்டோம்' என்கிறார்.

பொதுவாக வேளாண்மையில் இருப்பவர்கள் தங்களுடைய அடுத்த தலைமுறையை வேளாண்மையை விட்டு வேறு துறைகளுக்கு அனுப்பவே விருப்புகிறார்கள். இவர் அதற்கு மாறாக, முதுகலைப் பட்டம் பெற்ற தன்னுடைய மகனை அவருடைய விருப்பத்துடனேயே வேளாண்மைக்குள் இறக்கியுள்ளார். இயற்கைவழி வேளாண்மைப் பரப்புரைக் கூட்டங்களுக்கு இவர் போய்விடுவதால் இவருடைய துணைவியும், மகனுமே பண்ணையை மேலாண்மை செய்கிறார்கள்.

விகடன்

**ஆரோக்கியம் அதிகரிக்க... நோய் தவிர்க்க!: சரிவிகித ஊட்டச்சத்து**

சரியான அளவில் இருந்தால், கொழுப்பு, கார்போஹைட்ரேட், புரதம், நார்ச்சத்து என, எதுவும் உடலுக்குக் கெடுதல் இல்லை. ஆனால், காலையில் இட்லி, மதியம் வயிறுமுட்ட சாதம், இரவு மீண்டும் இட்லி அல்லது தோசை என, நாம் அன்றாடம் உண்ணும் மூன்று வேளை உணவுகளும் அரிசியை மையமாக வைத்தே இருக்கின்றன. அரிசிதான் இட்லி, தோசை, சாதம், பொங்கல், இடியாப்பம், புட்டு எனப் பல வடிவங்களிலும் உருமாறி, நம் தட்டை நிரப்புகின்றது. இதனால், நம்முடைய உணவை மாவுச்சத்து (கார்போஹைட்ரேட்) மட்டுமே ஆக்கிரமித்துள்ளது. மிகச் சிறிய அளவில்தான் புரதம், நார்ச்சத்து போன்ற சத்துக்கள் கிடைக்கின்றன. இப்படி, ஒரேவிதமான சத்துக்களை மட்டுமே உட்கொண்டால், உடலுக்குத் தேவையான சத்துக்கள் கிடைக்காது.




நம்முடைய உடல் உறுப்புக்கள் மற்றும் ஒவ்வொரு செல்லும் ஆரோக்கியமாகவும் திறம்படவும் செயல்பட, சரிவிகித ஊட்டச்சத்து அவசியம். இந்தச் சமநிலை பாதிக்கும்போது, நோய்கள், தொற்றுகள், சோர்வு, செயல்திறன் குறைவு போன்றவை ஏற்படுகின்றன. இந்தியாவில் சர்க்கரை நோய், இதய நோய்கள், உடல் பருமன் அதிகரித்திருப்பதற்கு, சரிவிகித ஊட்டச்சத்து உணவை எடுத்துக்கொள்ளாததுதான் முக்கியக் காரணம். மாவுச்சத்து, புரதம், நார்ச்சத்து, கொழுப்பு என நான்கு கூட்டணிகளின் கலவையே சமச்சீரான உணவு. கொழுப்பு, புரதம், கார்போஹைட்ரேட் ஆகியவை உடலுக்கு ஆற்றலைத் தருகின்றன. ஆனால், நார்ச்சத்தானது செரிமான மண்டலம் சிறப்பாகச் செயல்பட உதவுகிறது. இந்த நான்கிலும் வைட்டமின், மினரல்கள் உள்ளன. இந்தச் சமச்சீரான உணவுக்கு மாறுவதன் மூலம், தேவையான ஊட்டச்சத்துக்களை முழுமையாகப் பெறலாம்.

**கார்போஹைட்ரேட்**

கார்போஹைட்ரேட் அல்லது மாவுச்சத்து எளிதில் உடைக்கப்பட்டு குளுக்கோஸாக மாற்றப்பட்டு, ரத்தத்தில் கலந்துவிடும். நம்முடைய உடலில் உள்ள செல்களுக்கு ஆற்றல் கிடைக்க, குளுக்கோஸ் தேவை. உடலுக்குத் தேவையான ஆற்றலில் 45 முதல் 65 சதவிகிதம் கார்போஹைட்ரேட் மூலம் கிடைத்துவிடும். ஒரு கார்போஹைட்ரேட் மூலக்கூறுநான்கு கலோரி கொண்டது. ஒரு நாளைக்கு 1800 கலோரி தேவைப்படுபவர்கள், 202 முதல் 292 கிராம் வரை கார்போஹைட்ரேட்எடுத்துக்கொள்ளலாம். முட்டை, இறைச்சி உள்ளிட்ட சிலவற்றைத் தவிர்த்து எல்லா உணவிலும் கார்போஹைட்ரேட் உள்ளது.




## கொழுப்பு

கொழுப்பு என்பது திசுக்கள் மற்றும் ரத்தக் குழாய்களில் காணப்படும் ஒரு சிக்கலான அமைப்பு. வைட்டமின் ஏ, டி, இ மற்றும் கே ஆகியவற்றை கிரகிக்க, கொழுப்பு தேவை. மேலும், இது உடலுக்கு ஆற்றலையும் தருகிறது. ஒட்டுமொத்த கலோரி தேவையில் 20 முதல் 35 சதவிகிதத்தைக் கொழுப்புக்கள் மூலம் பெறலாம். ஒரு நாளைக்கு 1800 கலோரி தேவை எனில், அவர்கள் 40 முதல் 70 கிராம் கொழுப்புச் சதத்தை உணவில்

சேர்த்துக்கொள்வதில் தவறு இல்லை. ஆனால், நல்ல கொழுப்பாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். சருமம் நீக்கப்பட்ட கோழி இறைச்சி, மீன் போன்றவை போதுமான அளவு கொழுப்புச்சத்து பெறவும் ஆற்றலைப் பெறவும் உதவும்.

## புரதம்

தசை, எலும்பு, கூந்தல், செல், உறுப்புகள் போன்ற வளர்ச்சிக்கு அடிப்படைத் தேவை புரதம். இது சரியான அளவில் இருந்தால்தான் வளர்ச்சி சீராக இருக்கும். கார்போஹைட்ரேட், கொழுப்புச்சத்து இல்லாதபோது, புரதமும் செல்களுக்கு ஆற்றலை அளிக்கிறது. உணவில் 10 முதல் 35 சதவிகிதம் புரதச்சத்து இருக்க வேண்டும். ஒரு புரதம் என்பது நான்கு கலோரிகளைக் கொண்டது. 1800 கலோரி உணவுப் பழக்கத்தினருக்கு, 45 முதல் 157 கிராம் புரதம் தேவைப்படும். பால் பொருட்கள், அசைவ உணவுகள், பருப்பு, பயறு வகைகளில் புரதச்சத்து அதிகமாக உள்ளது.

| சீரான உணவுப் பட்டியல் | |
|---|---|
| காலை 8.30 | இட்லி, சாம்பார், சட்னி, வடை -1, ஆரஞ்சு ஜூஸ் - 100 மி.லி |
| காலை 11 | காய்கறி சாலட் |
| மதியம் 1 | கைக்குத்தல் அரிசி - 100 கிராம், குழம்பு, வேகவைத்த காய்கறி - 1 கப், கீரை (அ) முட்டை, ரசம், ஒரு டம்ளர் நீர்மோர் |
| மதியம் 2 | வால்நட், பாதாம், உலர் திராட்சை, பேரிட்சை - தலா 2 |
| மாலை 5 | பழங்கள் ஒரு கப் |
| இரவு 8 | சப்பாத்தி - 2, குருமா |
| இரவு 9 | ஒரு கிளாஸ் ஆடை நீக்கப்பட்ட பால் |

## நார்ச்சத்து

செரிமான மண்டலத்தின் ஆரோக்கியத்துக்கும், அதை ஒழுங்குபடுத்தவும் நார்ச்சத்து மிகவும் அவசியம். இது குளுக்கோஸாக மாறுவது இல்லை.

செரிமான மண்டலத்தில் சேரும் கழிவுகளை வெளியேற்றுகிறது. இதனால், சிறுகுடல் சுவர்கள் மூலம் நுண்ஊட்டச்சத்துக்கள் கிரகிக்கப்படுவது எளிதாகிறது. 1000 கலோரிக்கு, 14 கிராம் நார்ச்சத்து தேவை. 1800 கலோரி உணவுப் பழக்கம் உள்ளவர்களுக்கு, 26 கிராம் தேவைப்படுகிறது. பழங்கள், காய்கறி போன்றவற்றில் நார்ச்சத்து நிறைவாக உள்ளது. காய்கறிகளைக் கடித்துச் சாப்பிடும்போது, நார்ச்சத்து முழுமையாகக் கிடைக்கும்.

இப்படிச் சமச்சீரான உணவை எடுத்துக்கொள்வதன் மூலம், உடல் எடையைச் சீராகப் பராமரிக்க முடியும், இதயநோய், புற்றுநோய், சர்க்கரை நோய் வராமல் தடுக்க முடியும். கார்போஹைட்ரேட் அதிக அளவில் எடுத்துக்கொள்ளும்போது, அது கொழுப்பாக மாற்றப்பட்டு, உடலின் பல பகுதிகளில் சேமித்து வைக்கப்படும். சரிவிகிதத்தில் எடுத்துக்கொள்வதன் மூலம், உடலில் கொழுப்பு சேருவது தவிர்க்கப்படும். உடலின் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.


நாள் ஒன்றுக்கான
சமச்சீர் உணவு (சதவிகிதத்தில்)

| சத்துகள் | குழந்தைகள் | பெரியவர்கள் |
|---|---|---|
| மாவுச்சத்து | 50-65 | 50-60 |
| புரதம் | 10-30 | 10-15 |
| கொழுப்பு | 20-35 | 20-25 |
| வைட்டமின், தாதுக்கள் | 20-30 | 20-25 |

### எது சமச்சீர்?

தவிடு நீக்கப்படாத அரிசி மட்டுமே சமச்சீர் உணவு பட்டியலில் இடம்பெற முடியும். காலை மற்றும் இரவில் ஒன்றிரண்டாக இடிக்கப்பட்ட குருணை தானியங்களில் செய்யப்படும் கஞ்சி, அடை, களி போன்றவற்றைச் சாப்பிடலாம். உணவில் அதிகக் கொழுப்பு

சேராதிருக்க, தோல் நீக்கிய இறைச்சியே சமச்சீரில் இடம்பெறும். எண்ணெயில் பொரித்த காய்கள் எதுவும் சமச்சீரில் இடம் பெறாது. ஆவியில் வேகவைத்த உணவுகளில் சிறிதளவு எண்ணெய் சேர்ப்பது மட்டுமே சமச்சீர். மிகவும் பொடியாக நறுக்கிய காய், கீரை, கனிகளில் சத்துக்கள் வெகுவாகக் குறைந்துவிடும். பெரிய அளவில் நறுக்கியதாக இருக்கும். உருக்கிய நெய், ஆடை, கொழுப்பு நீக்கிய நீர்மோர் நல்லவை. ஸ்கிம்டு மில்க், வெண்ணெய் போன்றவை சமச்சீர் அல்ல. சப்பாத்தி குருமா, சப்பாத்தி பருப்பு, சப்ஜி சமச்சீர் உணவுதான். ஆனால், சப்பாத்தியுடன் சாஸ், ஜாம் சேர்த்துக்கொள்வது ஆரோக்கியத்தைக் கெடுக்கும்.




### சரிவிகித உணவுகள்

காய்கள் மற்றும் கனிகள்: காய்கறி, பழங்களில் புரதம் குறைவாக இருக்கும். வெங்காயம், கேரட், முள்ளங்கி, அவரை, தக்காளி. கீரைகளில் சிறுகீரை, அரைக்கீரை, பழங்களில் கொய்யா, திராட்சை, மாதுளை, வாழை. இதில், அனைத்து விதமான வைட்டமின்களும், தாதுக்களும் நிறைந்துள்ளன.

தானியங்கள்: கேழ்வரகு, கோதுமை, தினை, கம்பு, வரகு, குதிரைவாலி, சோளம்.

பால் பொருட்கள் மற்றும் அசைவம் : பால், தயிர், மோர், முட்டை, மீன், இறால், நண்டு, சிக்கன்.

பயறு பருப்பு வகைகள்: சோயா, ராஜ்மா, மூக்கடலை, உளுந்து, துவரை, மொச்சை, கொள்ளு.

கொழுப்பும் சர்க்கரையும்: சமையல் எண்ணெய்கள், பாதாம், வால்நட், நெய், தேங்காய், வெல்லம், சர்க்கரை, தேன் இதில் கொழுப்புச்சத்து நிறைந்துள்ளது.